



NOVEMBER
1943



DEC 1943
MADRAS

3L
M48.16.5
210085

# THE BHARATA MANI, MADRAS

Editor K. S. VENKATARAMANI


"அவனைப்போல புஷ்டியாக இருக்க வேண்டுமென்று நீ விரும்பவில்லையா"?
வாஸ்தவம்! பையன் எப்பொழுதும் சுறுசுறுப்பாகத் தான் இருக்கிறான். அவனுடைய சக்தி குறையாமல் இருப்பதற்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுக்கவும், குறைந்து போன சக்தியை உடனே பெறும்படி செய்யாவிடில் குழந்தை வெகு சீக்கிரத்தில் களைப்புற்று விடுமென்றும், விடமின் கூடியதும் புஷ்டி தரக்கூடிய ஆகாராதிகளினால்தான் குறைந்த சக்தியை மீண்டும் அடையலாமென்றும் அவன் தாயாருக்குத் தெரியும். இங்குதான் விடமின் சேர்ந்த டால்டா அதிக உபயோகமாயிருக்கிறது. அது ஆகாரத்திற்கு புஷ்டியையும் விடமினும் அளித்து சக்தியுண்டாக்கச் செய்கிறது.
DALDA
VANASP
விடமின் சேர்ந்த டால்டா சரீரத்தை திடகாத்திரமாக வளரச் செய்யவும், குறைந்த பலத்தை ஈடு செய்யவும் உதவுகிறது . . . விடமினுடன் சேர்ந்த டால்டா ஓர் சிறந்த ஆகார வஸ்து. அது சக்தியைத் தரத்தக்கது. உணவுகளை டால்டாவினால் தயார் செய்தால் ஆகாரத்திற்கு அதிக சக்தி கிடைக்கிறது
விடமின் சேர்ந்த டால்டா தாவர எண்ணெயால் தயார் செய்யப் பட்டதென்று உத்திரவாதமுள்ளது —சீல் செய்த டின்களில் விற்கப்படுகிறது
HVM. 19-18 TM
THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD., BOMBAY





மாத வெளியீடு

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

வருட சந்தா ரூபா 3 தனிப்பிரதி அணா 4

மாலை 10 | NOVEMBER 1943 : சுபானு௵ கார்த்திகைமீ | முத்து 5


## பொருளடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. அகல்யா சாப விமோசனம்.. | திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி | 149 |
| 2. மஹா மஹோபாத்யாய குப்புஸ்வாமி சாஸ்திரிகள்... | கே. பாலசுப்பிரமனிய ஐயர் ... | 151 |
| 3. பாக பத்திரம் ... | ரவிகன் ... | 152 |
| 4. சிந்தனையும் செயலும் ... | கே. வெங்கடாசலம் ... | 158 |
| 5. மாயையும் சிதைந்தது ... | ரா. சந்திரசூடன் ... | 161 |
| 6. சிறுவர் பகுதி ... | ஸ்ரீ மஹாலிங்க சாஸ்திரிகள் ... | 168 |
| 7. தமிழர் கண்ட புத்தர் பெருமான் ... | பி. ஸ்ரீ. ... | 170 |
| 8. முருகன் ... | சூடாமணி ... | 171 |
| 9. குறத்தியும் காதற்பெண்ணும் | கலை விநோதன் ... | 172 |
| 10. பஞ்சத்தைப் பரப்புகின்றனர் | ஏ. ஜி. வெங்கடாச்சாரி ... | 174 |
| 11. போகிற போக்கில் ... | மணி ... | 178 |


"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல,



நம்பிக்கை!
வந்த விருந்தினரை நரஸுஸ் காபி அளித்து உபசரித்திருக்கிறாள். அவர்கள் அதை வெகுவாக விரும்புவார்களென்பது அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். நரஸுஸ் காபி, டீ மிகச் சிறந்தவை என்பது விஷயமறிந்த வீட்டு எஜமானிகளுக்குத் தெரிந்தது தானே!
நரஸுஸ்
இந்தியத் தயாரிப்பில் தலைசிறந்தது
★
நரஸுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,
சேலம் தென்னிந்தியா
MNK 20

# இந்தியன் பாங்க்

லிமிடெட்

✻

தலைமை ஆபீஸ்:

**"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"**

**வடக்கு பீச் ரோடு :: மதராஸ்**

✻

லோகல் ஆபீஸ்கள்:

| | |
|---|---|
| எஸ்பிளனேட் | திருவல்லிக்கேணி |
| மயிலாப்பூர் | தியாகராய நகர் |
| புரசவாக்கம் | மவுண்டு ரோடு |

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிரான்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

✻

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ரூ. | 1,00,00,000 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 60,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் (30-6-43வரையாக) | ரூ. | 27,57,336 |
| ரிஸர்வ் நிதி | ரூ. | 28,10,800 |

**மொத்த லேவாதேவி 8 கோடிக்குமேல்**

✻

**சகலவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக் கொண்டு நடத்தப்பெறும்**

**பூரா விவரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.**

**N. கோபால அய்யர்,**
**செக்ரடரி.**

தொடர்பு வைத்துக்
கொள்ள வேண்டிய
கம்பெனி.

# ஹிந்துஸ்தான்

## கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸோஸைடி லிமிடேட்

*மன்னன் மகுடத்தினும் சிறப்புடைய கிரீடத்துடன்
விளங்கும் கம்பெனி*

***நற்பெயரே கிரீடமாக விளங்குகிறது***

### முன்னேற்றத்தின் நிலை

| | | |
|---|---|---|
| 1942௵த்தில் புதிய பாலிஸிகள் | ... ரூ. | 288,05,001 |
| அமுலிலுள்ள மொத்த வியாபாரம் | ... ரூ. | 19,36,75,434 |
| ஆயுள் அஷ்யூரன்ஸ் நிதி | ... ரூ. | 4,72,89,810 |
| மொத்த ஐவேஜிகள் | .... ரூ. | 5,18,19,442 |

*இதுவரை பிரதிநிதிகளில்லாத இடங்களில்*

### ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு எழுதவும் :—

மதராஸ் பிராஞ்சு :

*" ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ் "*

107, அரண்மனைக்காரத் தெரு,

ஜி. டி. மதராஸ்.

# அகல்யா சாப விமோசனம்

[திவான் பகதூர் - கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

நம்முடைய நூல்களில் அகல்யையின் கதையை வெகு விதமாக வர்ணித்திருப்பதின் உண்மையை நாம் நன்குணர்வதில்லை. அதில் நம்மவரின் வெகு தத்துவங்களை அடக்கி வைத்திருக்கிறார்கள். வேதங்களிலிருந்து இந்தக் கதை பெருகி விரிந்து கொண்டே வந்திருக்கிறது. வால்மீகி ராமாயணத்தில் இக் கதை பாலகாண்டத்தில் வருவதோடு உத்தர காண்டத்திலும் வருகிறது. பாலகாண்டத்தில் இந்திரனைக் கள்ளப்புருஷனாகவும், அகல்யைமனமறிந்து அவளை அடைந்தவனாகவும் குறிப்பிட்டிருப்பது உண்மையே. அந்தக் காரணத்தை வைத்துத் திருவாளர் சி. ராஜகோபாலாசாரியார் 'கலைமகள்' ஆனி மாதச் சஞ்சிகையில், இந்திரனைப் பற்றி, "புராணங்களில் தேவேந்திரனைப்போல் மோசக்காரனும் அற்பப்பையனுமானவன் வேறு யாரும் இல்லை. ஏதோ பழைய அதிர்ஷ்டத்தால் அவன் தேவர்களுக்கு அரசனாக ஏற்பட்டிருக்கிறான்" என்று கூறியிருப்பது பொருத்தமல்ல.

இந்திரனை நம்மைப் போன்ற அற்ப மனிதர்கள் இகழ்ந்து கூறுவது முறையாகாது. இந்திரன் தன் தவத்தின் வன்மையால் மூவுலகத்திற்கும் அரசனாக அமைந்தான். பிரகஸ்பதியே அவனுடைய குரு. முனிவர்களாலும் தேவர்களாலும் போற்றப் பட்டவன். கேனோபநிஷத்தில் அவன் பிரம்ம வித்தையை உமாதேவியிடத்தில் அறிந்தவனாகவும், பிரம்ம சொரூபத்தை மற்றவர்களைக் காட்டிலும் முன்னாக அறிந்தவனாகவும் கூறப்பட்டிருக்கிறது. கௌஷீதகி உபநிஷத்தில் அவன் தன் பிரம்ம ஞானத்தைப் பிரதர்தனனுக்கு அறிவித்து அந்த ஞான பலத்தால் தான் விச்வரூபனை வதம் செய்தும், பதிதர்களான துறவிகளைத் தண்டித்தும் தனக்கு ஒரு குறைவும் ஏற்படவில்லை என்று உரைத்தான். தினம் செய்யப்படும் சந்தியாவந்தனத்தில் நாம் அவனை வழிபடுகிறோம். மாருதி சீதையைத் தேடப் புறப்படும்பொழுது இந்திரனையும் வணங்கி விட்டுத்தான் புறப்படுகிறார். எட்டுத் திக்பாலகர்களில் ஒருவன் அல்லவா? யாகங்களில் ஆராதிக்க வேண்டிய தெய்வமல்லவா?

வேதங்களிலும் இதிகாசங்களிலும் புராணங்களிலும் இந்திரனைப்பற்றிக் கூறியிருக்கும்கதைகளுடைய தத்துவங்களை நாம் நன்கு ஆராய்ச்சி செய்து உண்மையை அறியவேண்டும். சிறந்த யஞ்ஞங்களாலும் தவங்களாலும் மற்றவர்களுடைய பதவியைவிட உயர்ந்த பதவியை இந்திரன் அடைந்தான். பரமாத்மாவுக்கு அடுத்த படியில் இருக்கிறவன். திரிமூர்த்திகள் மட்டுந்தான் அவனைவிட ஞானத்திலும் சக்தியிலும் உயர்ந்தவர்கள். அமிர்தத்தை உண்டவன். மனத்தின் தெளிவு பூர்ணமாக உள்ளவன். தர்மக் கடலின் கரையைக் கண்டவன். அசுரர்களை வென்று கொன்று தர்மத்தை நிலைநாட்டித் தர்ம வழியை யாவருக்கும் காட்டியவன்.

இந்திரன் நித்ய யுவா. புண்யாத்மா. சிறந்த போகங்கள் உள்ளவன். பரமாத்மாவே அவனுக்குத் தம்பியாக வாமனவதாரம் செய்தார். பாகவதத்தில் இந்திர கர்வ பங்கக் கதை, இந்திரனைத் தாழ்த்துவற்கு அல்ல. அது ஒரு தேவ லீலை. பரமாத்மாவின் பெருமையை

உணர்த்துவதற்காகவேதான். பிரம்மா கிருஷ்ணன் மேய்த்த பசுக்களை ஒளித்ததும் அதற்காகவே. கிருஷ்ணபகவானே பகவத்கீதையில், தாமே தேவர்களுக்குள் இந்திரனாக இருப்பதாய்க் கூறியிருக்கிறார்.

இந்திரன் அகல்யையிடத்தில் அவள் மணத்திற்கு முன்வைத்திருந்த பேராசையை வால்மீகி உத்தரகாண்டத்தில் 30-ம் அத்தியாயத்தில் கூறுகிறார். ஹலா என்றால் அழகுக் குறைவு; அகல்யை என்றால் அழகு நிறைவு. தன் சிருஷ்டியில் யாவரும் ஒரேமாதிரியான உருவமும் அழகும் உள்ளவர்களாக இருப்பதால் நிகரற்ற அழகுள்ள பெண் ஒருத்தியைப் படைக்க விரும்பிப் பிரம்மா படைத்தார். இந்திரன் அவளை மணக்க விரும்பினான். அதைப் பிரம்மா அறிந்தார். அவள் விஷயமாகப் பெரும் போட்டி இருக்கும் என்று நினைத்தோ, என்னவோ அவளைக் கௌதமரிடம் ஒப்படைத்தார். கௌதமர் அவளை விரும்பாமல் கற்புள்ளவளாகவே பாதுகாத்தார். அவருடைய மாறாத மாசற்ற மன நிலையை மெச்சி அவளைப் பிரம்மா அவருக்கு மணஞ் செய்து கொடுத்தார். அதன் பிறகு ஏன் இந்திரன் அவளை அணுகினான்? வால்மீகியே பாலகாண்டத்தில் கூறுகிறார்:

கௌதமர் செய்த கோரமான தவத்தால் தன் காப்புக்கு உட்பட்ட மூவுலகங்களுக்கும் என்ன கேடு வருமோ?— என்று பயந்து இந்திரன் அவர் தவத்தைக் கெடுக்க முயற்சி செய்தான். கௌதமருக்குக் கோபம் உண்டாகும்படி செய்தால் தவத்தின் வன்மை அழிந்து போகும் என்று அவனுடைய எண்ணம். இந்த விஷயமாக ஆராய்ச்சி செய்யும்பொழுது பிருந்தையின் கதையை நினைவில் வைத்துக்கொள்ளவேணும்.

ஆனாலும் அவளிடத்தில் தான் முன் வைத்திருந்த அபார ஆசையும் அவனைத் தூண்டிற்று. பரமாத்மா ஒருவர் தவிர மற்றவர்களுக்கு, தேவர்களாக இருந்தாலும் *முக்குண சம்பந்தம் முக்தி வரையில் இருந்தே தீரும்.

அவன் செய்த காரியம் உலக நன்மைக்காகச் செய்யப்பட்டாலும், செயல் தீய செயலானதாலும், நிஷ்காமமாகச் செய்யாமல் காமத்துடன் செய்ததாலும் அவனுக்குத் தண்டனை ஏற்பட்டுப் பிறகு தூயவனானான். இந்திர பதவியை இழந்த பிறகு யாகஞ் செய்து பகவானுடைய அருளை அடைந்தான்.

அகல்யையும் முழு மனத்துடன் விபசாரியாகக் கெட்ட காரியம் செய்தாளா? வால்மீகி உத்தரகாண்டத்தில் அகல்யை தான் அறியாமையால் செய்ததாகச் சொன்னாள் என்று கூறுகின்றார். ஆகையால் அவளுக்குச் சபலத்தால் உண்டான அஞ்ஞானமே தீய செயலுக்குக் காரணமாக நேர்ந்தது. அவனிடத்தில் திடமான விருப்பம் கொண்டவள் அல்ல. தேவேந்திரன் விரும்பும்படியான அழகு தன்னிடம் இருப்பதால் உண்டான மோகமே காரணம். கற்பு நிலை ஒரு நிமிஷம் தவறியது. உடனே தவற்றை அறிந்து வருந்தினாள். காம வெறிகொண்ட விபசாரியாக அவளை நினைக்கக்கூடாது. சாபத்தை அனுபவித்தாள். பரமாத்மாவான ஸ்ரீராமனுடைய அருளால் புனிதையானாள். சீதைக்குச் சமானமான பதிவிரதையாகக் கருதப்படுகிறாள் அல்லவா? பகவானுடைய அருள் பூர்ணமாக அடைந்த பிறகு பாவம் எப்படி ஒட்டும்?

உத்தர காண்டத்தில் வால்மீகி மற்றொரு தத்துவத்தைத் தெரிவிக்கிறார். அகல்யை ஒருத்தியே நிகரற்ற அழகு உள்ளவளாக இருந்ததால் அல்லவா தவறு நேர்ந்தது? கௌதமர் சாபம் கொடுத்தபொழுது, அவளுடைய அழகு

---

*முக்குணங்கள் ஸத்வகுணம், ரஜோ குணம், தமோகுணம் என்பன.

# மஹாமஹோபாத்யாய குப்புஸ்வாமி சாஸ்திரிகள்

[கே. பாலசுப்பிரமணிய ஐயர், அட்வகேட்]

நம் பாரத நாட்டிற்கும் ஸம்ஸ்கிருத உலகத்திற்கும் திலகம்போல் விளங்கிய இப்பேரறிஞர் தேகவியோகமடைந்ததால், இந்நாட்டிற்கும் ஸம்ஸ்கிருதக் கல்விக்கும் பெரு நஷ்டம் ஏற்பட்டுவிட்டதென்று சொல்வது மிகையாகாது. இவரை நன்கறிந்த பல நண்பர்களுக்கும், இவரிடத்தில் கல்வி கற்றுப் பயனடைந்த நூற்றுக்கணக்கான சிஷ்யர்களுக்கும் அடங்காத மன வருத்தம் உண்டாயிற்று. இவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தையும், பல நற்குணங்களையும், அபாரமான வித்வத்தையும், பலதுறைகளில் இவர் திறமையையும், இவர் கல்விக்குச் செய்த அரும்பெரும் உதவிகளையும், பல அனுதாபக் கூட்டங்கள் கூடிப் புகழ்ந்து பேசியும் அவர்கள் மனம் ஆறுதலடையவில்லை. நாம் ஒரு பண்டித ரத்தினத்தை இழந்துவிட்டோமென்பதில் ஐயமில்லை.

இவர் 37 வருஷ காலம் ஸம்ஸ்கிருதக் கல்விக்கே உழைத்துத் தம் வாழ்நாள் முழுவதும் கழித்தவர். இவருடைய பாண்டித்யம் கடல்போல் ஆழ்ந்ததாயும், விரிந்ததாயுமுள்ளது. சாதாரணமாக ஒரு சாஸ்திரத்தில் பயிற்சி உள்ளவர்களையே பெரும் வித்வான்களென்று உலகம் புகழ்வதுண்டு. ஆனால் இவர் நாலு சாஸ்திரங்களிலும் வன்மையுடையவர். பதவாக்ய ப்ரமாணஜ்ஞர் என்றே இவரைச் சொல்லலாம்.

சாஸ்திரப் பயிற்சியோடு ஸாஹித்யத்தில் நல்ல அறிவும் சேர்ந்து பார்ப்பது உலகத்தில் அரிது. அந்த அதிசயத்தை இவரிடத்தில் நாம் பார்க்கலாம். இதை நுண்ணறிவால் கண்டறிந்து "தர்சன கலாநிதி" என்கிற பட்டத்தை அருளின நம் கருணாமூர்த்தியான காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகளுடைய அநுக்ரஹ புத்தியை என்ன என்பது?

மற்றும் ஒரு விசேஷமும் உண்டு. ஸாஹித்யத்தில் அலங்கார சாஸ்திரமென்று ரொம்பவும் பெரிய கல்விப் பகுதியையும் நன்கு ஆராய்ச்சி செய்தவர். பழக்கத்தில் கொண்டுவரப்படாத அரிய பழைய நூலாகிய 'த்வன்யாலோகம்' முதலான உயர்ந்த அலங்கார சாஸ்திர நூல்களைப் படிக்கும் முறையில் வழிகாட்டியாக உள்ளவர். காஷ்மீர தேசத்துப் பெரும் புலவர்களாகிய ஆனந்த வர்த்தனர், அபிநவ குப்தர் என்ற பேராசிரியர்கள் எழுதிய 'த்வன்யாலோகம்' 'லோசனம்' என்ற

(166-ம் பக்கம் பார்க்க)

---

மற்றப்பெண்களுக்கும் இருக்கவேணும், என்றுரைத்ததால் அப்படியே ஏற்பட்டது.

கம்பரும் அகலிகை கதையில் வால்மீகி கதையிலிருந்து சில மாறுதல்களை வர்ணித்தாலும், அகலிகையின் மனத்தையும் இந்திரனுடைய மனத்தையும் வால்மீகி போலவேதான் வர்ணித்திருக்கிறார். "உற்ற மையலால் அறிவு நீங்கி" என்று இந்திரன் மன நிலையையும், "உணர்ந்த பின்னும் தக்கதன்றென்ன ஓராள்" என்று அகலிகை மனநிலையையும் கூறியிருக்கிறார். துளஸீதாஸருடைய ராமசரித மானஸம் என்ற நூலிலும் அதே உண்மையைத்தான் பார்க்கிறோம்.

நாடகம்

# பாகபத்திரம்

[ரஸிகன்]

## அங்கம் - 2

[அன்றிரவு சுமார் ஒன்பது மணியிருக்கும். காரைக் குளத்திற்கு நாலு மைல் கிழக்கேயுள்ள முள்ளிப்பள்ளமென்னும் குக்கிராமத்தில் எல்லா வீடுகளிலும் அரவம் அடங்கினாற்போல் காண்கிறது. ஒற்றைச் சிறகாயுள்ள பத்து வீடுகள் அடங்கிய அந்தக் கிராமத்தில் ஒரு வீட்டுக் கதவை யாரோ வந்து தட்டுகிற சத்தம் கேட்டு வீட்டுக்கார ராமகிருஷ்ணய்யர் ஒரு காலணா மண்ணெண்ணெய் விளக்கைக் கையில் ஏந்தி வந்து கதவைத் திறந்துகொண்டே]

ராமகிருஷ்ணய்யர் :—யாரங்கே ?

சீதாராமன் :—நான்தான், அத்திம்பேரே, கதவைத் தறங்கோ.

ரா :—சீதாராமனா ? என்னடா இத்தனை நாழிக்குமேலே ? எங்கேருந்து வரே ? ஊர்லெ எல்லாரும் சௌக்கியந்தானே ?

சீ :—சௌக்கியந்தான். சாப்பாடாயிட்டுதோ ? (என்று கேட்டுக்கொண்டிருக்கையில் அவன் தமக்கை, அவன் பேச்சுக் குரல் கேட்டு வெளியே அவசரமாய் வந்து)

லக்ஷ்மி:—ஏண்டாப்பா, எங்கேருந்து வரே இத்தனை நாழிக்கி ? ஐயோ, இப்பொதானே சாதம் தூத்தங் கொட்டினேன்.

சீ :—தூத்தங்கொட்டின சாதம் ஆப்பட்டாப்போராதா நான் இருக்கற லக்ஷணத்துக்கு ? சட்டுனு ஒரு எலையைப் போடு. பசி ப்ராணன்போரது. இன்னி முழுக்கப் பட்டினி. கணக்குப்புள்ளெயாத்துலே ஒருபுடி பழயது மத்தியானம் பதினஞ்சு நாழிக்கிச் சாப்பட்டது.

ல :—அது என்ன அநியாயம்டா ? (என்று கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு உள்ளே போக, சீதாராமனும் பின்னோடு உள்ளே போகிறான். அவன் கைகால் அலம்பி ஒரு டம்ளரில் தண்ணீரை எடுத்து ஸந்தியாவந்தனம் பண்ணும் பாவனையாய்க் கீழே கொட்டுவதற்குள்ளாக ஒரு இலை போட்டு,. தீர்த்தங் கொட்டின சாதத்தை எடுத்துவைத்துத் தொட்டுக்கொள்ள வடுமாங்காயும் ஒரு கல்சட்டியில் குழம்பும் இட்ட வைக்கிறாள். சீதாராமன் பேசாமல் சோற்றைப் பிசைந்து நாலுவாய் சாப்பிட்டுவிட்டு, ‘அப்பாடா !’ என்று களைப்பாய்ச் சுவரில் சாய்கிறான். அவனைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த லக்ஷ்மி, சமீபத்தில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்த தன் கணவனைப் பார்த்து)

ல :—சீதாராமனுக்கு ஒடம்புபோன போக்கைப் பார்த்தேளா ?

ரா :—வேளாவேளைக்கி சோறு தண்ணியெக் கண்டாத்தானே. எப்பொ பாத்தாலும் வெய்யல்னு இல்லெ, மழென்னு இல்லெ, வயக்காடு சுத்தரதும், மாடு கண்ணுக்கு சுசுரூஷை பண்ணரதும், ‘தோட்டி மொதல் தொண்டமான் வரையிலும்’ பாளே, அந்தமாதிரி வீட்டுவேலெ ஒண்ணு பாக்கி விடாமெ, மாசம் இருபது ரூபா சம்பளம் கொடுத்தாக்கூட அப்படிச் செய்யமாட்டா, அப்படிச் செய்யறான். காலாகாலத்திலே சாப்பிடாதுக்கு எங்கே போறிருக்கு அவனுக்கு ? மொத்தத்திலே நீலகண்டன் அதிர்ஷ்டசாலி. அவ்வளவுதான் நான் சொல்வேன்.

ல :—காலா காலத்திலே அவன் சாப்படாத்துக்கு வந்துட்டாத்தான் பொண்டாட்டிக்கு நாலு பேர் காத்திண்டிருக்காளாக்கும் ! வீட்டு யெஜமானிக்கி அஞ்சங்குளந்து மனசு வந்தா, ஆறி அவலாப்போன இத்தெனை

சோத்தெ வெச்சு, உப்பு வாய்லெ வைக்க வழங்காது மெந்தியக் கொழம்பும் வளே மோரும்—கம்மாத்திலே தொட்டியிலே கூடக் கொட்டமாட்டோம், மாடு குடிக்காதுன்னு—கொணைந்து எறிஞ்சுப்புட்டுப் போயிடுவோ, சாப்படாபோது மென்னே அடச்சாக்கூட இத்தனெ தண்ணி கொடுக்காத்துக்கு ஒரு மனுஷா கடையாது. (தம்பியின் கஷ்ட தசையைநினைத்துத் துக்கிப்பவளாய், அழுதுகொண்டு) அவன் தலேலே எழுத்து அப்படிப் போட்டிருக்கு, யாரென்ன பண்ணாது?

சீ :—(கொஞ்சம் இதற்குள் தன்னைத் தானே ஆசுவாசப்படுத்திக் கொண்டுவிட்ட படியால்) அந்தச் சோத்துக்குக்கூட இன்னிக்கி வழியில்லாமெ போச்சு. மன்னி யென்னபண்ணுவோ, அவளெ வீணாச் சொல்லப்படாது (என்று மேலே சொல்லுவதற்கு முன், அவன் அக்காள் வெகு அலக்ஷியமாய்)

ல :—ஆமா, நீ கண்டுட்டயோனு அவளுடைத! இதொரு ஏப்பளாப்பிச்சம், தயிரும் பழயதுமாப்போட்டா மூணாள் வேலே செஞ்சிண்டு கடக்கும்னு நன்னாக் கண்டுண்டா. இல்லாபோனா, ஊராராத்துப் புள்ளெகளாட்டமா சூடிகையா யிருந்தாக்கெ, 'எனக்கென்னவுண்டோ அதைப் பிரிச்சுப்போடு, கூழோ கஞ்சியோ; எங்காரியத்தெ நான் பாத்துக்கரேன்'னு சொல்லாதோ ஒரு புள்ளெ அப்படி ஒரு வேளே பண்ணிப்புட்டா அல்லாக்காத்துப் போயிடுமேன்னு மன்னி ஒபசாரம் பண்ணரா, ஒனக்கு உச்சி குளுந்துபோராது.

சீ :—ஆமா, நாந்தான் அசடு, நீதான் ரொம்ப கெட்டிக்காரி! பிரிச்சுண்டு போரத்துக்குத் தெரியாமெ யிருக்கல்லெ நான். ஊர்லெ நாலு பேர் என்ன சொல்லுவா?

ரா :—இப்பொ அதைப்பற்றி என்ன? அதிருக்கட்டும், என்ன நடந்தது இன்னிக்கி?

சீ:—(தனக்கேற்பட்டதாக எண்ணி வருந்திய பரிபவம் ஞாபகத்துக்கு வரவே, மறுபடி முகத்தில் கோபமும் துக்கமும் துலங்க) - அதைத்தான் சொல்ல வந்தேன். அதுக்குள்ளெ இவ என்னவோ குறுக்கே பொளந்தா. அண்ணா பத்து நாளா ஊர்லெ இல்லெ; சுப்புணிக்கி சொரி சொரங்காயிருக்கு, அழைச்சிண்டு போரதுன்னு அவா மாமா எழுதி யிருந்தார். போனவன் போன எடம் தானே, ஒங்களுக்குத் தெரியுமே, பேசாமெ இருந்துட்டான். மன்னிக்கி சொரத்தேயில்லெ. ஒரு கடுதாசுகூட இல்லெ, இவ சதா வேதனேப்பட்டிருந்தா. நம்ப பாடு திண்டாட்டமாய் போச்சு, காலா காலத்திலே சோறு தண்ணி இல்லெ. இன்னிக்கி 15 நாழியாச்சு அடுப்பு மூட்டாத்துக்கு. பாதிச் சமயக்கூட ஆகல்லெ, புள்ளெலெ அழைச்சிண்டு வந்து சேந்தான் ஒம்பாடு எம்பாடுன்னு. எனக்கோ வயத்துப் பசி புடுங்கி யெடுத்தது. சரி, புள்ளெயக் கண்டுட்டா, இம்மெ அஸ்தமனந்தான் இன்னிக்கிசோறுன்னு நெனச்சுண்டிருக்கேன். நல்ல வேளேயா கணக்குப் புள்ளெ ஆம்படையா வந்தா. 'ஏண்டாப்பா, சாப்பாட்டுக்கு நாலு நாழியாகும்போலெருக்கே, ஊத்தப்பம் வாத்திருக்கேன், ரெண்டு தின்னுட்டுப் போகலாம் வா'ன்னு கூப்பிட்டா. போய் ரெண்டு தின்னேன், பசியடங்கல்லே, ஒரு புடி மோருஞ் சாதம் போட்டா, அதையும் சாப்பிட்டேன். சாப்பிட்டிண்டிருக்கரபோது சுப்புணி வந்து சாப்பிடக் கூப்பிட்டான். நேக்கு இப்பொ சாதம் வாண்டானுட்டேன். ஆத்துக்குப் போய்ட்டான். சித்தெய்க்கெல்லாம் ஆத்துப் பக்கம் போனேன். அண்ணா சாப்புட்டு திண்ணேலே படுத்திண்டிருந்தான். ஊர்ச் சேதி ஒண்ணுஞ் சொல்லல்லியேன்னு ஆளோடிக் கிட்டப் போய் நின்னேன். என்னைத் திரும்பியே பாக்கல்லே. 'நம்மைக் கேக்காதபோது நமக்கென்ன'ன்னு அடுத்தாத்துத் திண்ணேலே நானும் படுத்துண்டுட்டேன். சாயந்தரம் ஆத்தங்கரைக்குப் போய்ட்டு வந்தேன். நான் வரதைத் திண்ணேலே ஒக்காந்து

ஜபம் பண்ணிண்டிருந்தவன் பாத்திண்டு தான் இருந்தான். அவன் அங்கே ஒக்காந்திருக்கானேன்னு அடுத்த திண்ணேலே ஒக்காந்து ஜபம் பண்ணிண்டிருந்தேன். சட்டுனு எழுந்து கதவெச்சாத்திண்டு உள்ளே போயிட்டான். மாட்டுக்குத் தீனிகீனிவைக்கத்தான் போயிருக்கானுக்கும்னு பேசாமெயிருந்தேன். நான்தான் தினம் வைக்கர வழக்கம். அய்யர்வாள்தானே செய்யரதுன்னு செய்யட்டுமே, நமக்கென்னன்னு பேசாமெதான் இருந்தேன். சித்தெய்க்கெல்லாம் சாப்புட்டுட்டு பாயெ எடுத்துண்டு வாசலுக்கு வந்துட்டான். நான் பசியோடே திண்ணேலே ஒக்காந்திருக்கரபோது, அவன் வயர் பசிதான் அவனுக்குத் தெரிஞ்சுது போலேருக்கு (என்று சொல்லும்போது சீதாராமன் அழ ஆரம்பிக்க, லக்ஷ்மிக்கும் கண்ணில் ஜலம் வருகிறது).

ரா:—நான்தான் சொன்னேனேடா, அவன் ரொம்ப இருமாப்புப் புடிச்சிருக்கான். மத்தியானம் 3 மணிக்கி கஞ்சி வாப் போரதுன்னு நீ காத்திண்டிருக்கல்லியோல்லியோ? ராத்திரிக் கூப்படரத்தில்லேனு வெச்சுட்டாம்போலிருக்கு!

சீ:—சரி, அவன் கூப்படவாண்டாம், அந்தப்புள்ளெயை விட்டுக் கூப்படச் சொல்லப்படாது? பேசாமயிருந்துட்டான்; எனக்கும், தானு உள்ளே போய் எலேயைப் போட்டிண்டு ஒக்கார்ரத்துக்கு வேண்டியிருக்கல்லெ. அவன் ஊரலெ இல்லாதபோது நான்மட்டும் தனியா ஒக்காண்டு சாப்பிடல்லியா? அது பாந்தமாயிருந்தது. அவன் ஆத்திலே இருக்கரபோது என்னெத் திண்ணேலே வெச்சுப்புட்டுச் சாப்படரதுன்னு, அப்பரம் என்ன வந்திருக்கு?

ல:—ஏன், ஒங்க அருமை மன்னி கூப்பிட்டுப் போடப்படாதோ?

சீ:—அவனெ ஒட்டித்தானே அவ நோவு. அவன் பேசாமெ இருக்கரபோது அவ என்ன பண்ணமுடியும்?

ல:—அடுத்தாப்பிலே அவ புள்ளெ பட்டினி கடந்தா அப்படி பேசாமெயிருப்பளா?

ரா:—அதில்லியோ? தன் கண்ணிலே மை பட்டாத்தான் கரிக்கும். அப்பறம் என்ன பண்ணினே?

சீ:—என்ன பண்ணரதுன்னு புரியல்லே. எனக்கிருந்த துக்கத்திலே பசிகூட மரெஞ்சு போச்சு. விர்ருன்னு ரேழிலே போய் செருப்பெ மாட்டிண்டு கிளம்பினேன். 'எங்கருடா'ன்னு கேப்பாரைக் காணும். ஒண்ணுந் தோணல்லெ. இங்கே வரலாம்னு வந்தேன் (என்று சொல்லி எதையோ யோசித்து முடிவுக்கு வந்தவன்போல்) காலம்பரக் களம்பி மோந்தனூர் போய் அவளெ அழச்சுண்டு வரலாமுனு யோசிக்கிரேன். யார் கூப்படராளோ கூப்படல்லியோ, வீட்டுக்குள்ளே போய் சோத்தெப் போடச் சொல்லிச் சாப்புட்டு வரலாமோல்லியோ?

ரா:—ரொம்ப சமத்துதான். ஒங் கண்ணன் ஒன்னெ ஒரு தூணுக்கு சமானமாவெச்சா, ஒன் னு ம் ப டை யாளுக்கு வீட்டிலே ரொம்ப நடந்துடுமோ?

ல:—அதெல்லாம் அவ வாக்கிரத் தயாராயில்லே. ஊருக்குப் போரபோது எங்கிட்டச் சொல்லிப்புட்டுப் போய்ட்டாளே—'இம்மெ ஒரு நாழி சரிப்படாது, வேறெ குடித்தனம் போட்டாத்தான் நான் காரைக்கொளம் வழி வரப்போரேன்'னு.

சீ:—ஓகோ, அவ்வளவு அந்தஸ்து ஏற்பட்டுப் போச்சோ அந்தக் கழுதைக்கு? அப்பொ அவாத்திலேயே யிருக்கட்டும்.

ரா:—என்னடா அசட்டுத்தனமாயிருக்கே ஒம்பேச்சும் வார்த்தையும்! திண்ணேலே ஒக்காந்திருக்கிற ஒனக்கென்ன தெரியும் வீட்டுக்குள்ளே நடக்கிரது? பொம்மனாட்டிகளுக்குள்ளே சச்சரவு வந்துட்டா ஒரு நாழியின்னுலே தனியாப்போறது எல்லாருக்கும் நல்லது. ஏன், ஒங்கக்கா என்னாத்துக்கு

வந்த ஆறுவது மாசத்திலே நான் எங்கப்பா கிட்டே புரிச்சுண்டு வந்துடலியோ? இத்தனைக்கும் எங்கம்மா ரொம்ப நல்லவள்னு பேரு.

சீ :—திடீர்னு எட்டு வருஷமா இல்லாத மனஸ்தாபம் இப்பொ என்ன வந்துட்டுது? இந்தக் கழுதெ யாராவது ஊர்லெ வெஷமம் பண்ணரவா பேச்செக் கேட்டிருக்கும்.

ல :—ஏண்டாப்பா, எட்டு வருஷமாயில்லாமெ இப்பொ என்ன வந்துட்டுதுங்கறெயே, நீயும் எட்டு வருஷமாக் கைகட்டிக் காத்துண்டு தாஸானுதாஸனாத்தான் அண்ணாவுக்குத் தடுக்குப் போட்டிண்டிருந்தே. இப்பொ ஒரு வேளை சாப்படக் கூப்படல்லேன்னு ஏன் அவ்வளவு ஆத்தரம் ஒனக்கு அவன் பேர்லெ வந்துட்டுது? ஆம்புள்ளைக்கித் தான் ரோஸமோ, பொம்புள்ளைக்கி ரோஸமில்லியோ?

ரா :— ஆம்புள்ளைக்கி ரோஸம்னு யார் சொன்னா? ஒன் தம்பி அவ்வளவு ரோஸக்காரனா யிருந்தா எத்தனையோ நாளாயிருக்குமே அவன் தனியாப் போய்! ஊர்லெ ஒத்தர் பாக்கியில்லெ, எல்லாரிட்டேயும் இவா அண்ணன் இவனெப்பத்திச் சொல்ரது கணக்கு வழக்கில்லெ. பிச்சு சாஸ்திரிகளிண்டே நேத்திக்கித் தான் பேசிண்டிருந்தான்னு, சாயந்திரம் கடத்தெருவுலே கண்டு சொன்னார். "என் தம்பிக்கி ஒரெழவுந் தெரியல்லெ, அவனாலே பலதினுசான உபத்திரவம். குடியானவனெப் பொட்டக் கார்வார் பண்ணரானே யொழிய விடர எடத்திலே விடணும், கட்டர எடத்திலே கட்டணும்னு எவ்வளவு சொன்னாலும் கேக்கமாட்டேங்கிறான். ஏதாவது சொல்லப்போனா மூக்குக்கு மேலே கோபம் வரது. நாலு மனுஷாளண்டே மொதல்லெ பழகத் தெரிய வாண்டாமோ? வண்டியூர் அய்யாத்தொரையரிண்டே ஒரு கணக்குத் தீரவேண்டியிருந்தது. நோட்டுத் தொகையைக் குடுத்தனுப்பிச்சு, 'ஏதாவது வட்டிலே கொஞ்சம் தள்ளிக் கேட்டேன்னு கேட்டு வாயேண்டா'ன்னு சொல்லி யனுப்பிச்சேன். அந்த மனுஷன் கல்லிலே நாருரிக்கரவர். அவரெ ரொம்பத் தளுக்கான்னா கேழ்க்கணும்? இவன் போய் தடிக்கம்பாட்டமா நின்னாம்ப்லேருக்கு, அவர் ரொம்ப முக்கிண்டு மொனகிண்டு கொடுத்த பணத்திலே முழுசா மூணு ரூபாயெ எடுத்துக் குடுத்து, 'இந்தாடாப்பா, இதெ அண்ணாண்டெ கொடு. காலம் ரொம்ப சிரமமான காலமாயிருக்கப்பா'ன்னு கையாண்டி பண்ணினாராம். அதுக்கென்ன பண்ணரது? கொடுக்கரவன் கைமேலேதான், வாங்கரவன் கை கீழேதான். இவர் தொரைக்கிக் கோபம் வந்துட்டுது. அந்த மூணு ரூபாயை அந்த மனுஷன் மேலே—என்ன இருந்தாலும் வயசானவர் எங்கிர மரியாதைகூட இல்லாமெ—விட்டெறிஞ்சுட்டு, 'ஒம்ம பள்ளத்திக்கி தீவளிக்கிப் பொடவெ வாங்கிக் குடும்'னுட்டு வந்துட்டான். வந்துட்டேன்னு எங்கிட்டப் பெருமையாப் பேசிக்கிறான்! அவருக்கு ரொம்ப நஷ்டமோனா!"ன்னு என்னென்வோ சொன்னானாம்.

சீ :—ஆமாம், அந்த மாதிரி பினாதிப் பயல் சாவாஸம் நமக்கென்னத்துக்கு? இவன் வேணுமானா அப்பேர்ப்பட்ட பயல்களிண்டே பல்லெக் காட்டட்டும்; எனக்கு முடியாது.

ரா :—அதைத்தாண்டா சொல்ரது. எப்பொ நரநரப்பு வந்துட்டுதோ, அப்பொ, மரியாதெயா வெலகிப் படரது மேல். பச்சைமண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டாது, வெருமனே சொல்லரதிலெ என்ன பிரயோஜனம்?

ல :—அதுமட்டுமா? நாளைக்கி நடக்கப் போரத்தை யோசிக்க வாண்டாமா? அவனுக்குப் புள்ளெயுங் குட்டியுமா மணியடிக்கரது. இதும் வயதிலே இன்னும் ஒரு புழுவைக்கல்லே. பகவான் என்ன நெனச்சிண்டிருக்காரோ? (என்று தன் தம்பியின் பிள்ளையில்லா நிலைமையைப்பற்றிப் பரிதவிப்பவள்போல் பெருமூச்செறிகிறாள்.)

சீ :—போரும், அது ஒண்ணுதான் கொரைச்சலாயிருக்கு !

ல :—சே! அப்படிச் சொல்லாதே, கொலம் வழங்க வேண்டாமா ?

ரா :—ஏன், தம்பிக்கிப் புள்ளெ குட்டி பொரக்காதுன்னு முடிவு கட்டிப்புட்டேயோ ? வேண்டியது பொரக்கும்.

ல :—பொரக்கணும்னுதானே வேண்டாது.—அது தான் சொல்ல வந்தேன். அண்ணாவுக்கு அடுத்தடுத்தாப்பிலே மூணு பொண்ணுக்குக் கலியாணம் ஆகணும். பெரிய பெரிய எடமாப் பாக்கணும்னு ஆசையிருக்கு அம்மாக் காரிக்கி. பணத்தை மூட்டெயாக் கட்டிப் போட்டுண்டு தேடினுன்ன ஆப்படும் ? ஆயிரம் ஆயிரமாக் கடன் வாங்க வேண்டியதுதான் அய்யாத்தொரைய ரிண்டையோ வேரெயாரிண்டெ பண மிருக்கோ அவா கிட்டே ஒருவட்டி, ரெண்டு வட்டினு. ஒண்ணுயிருக்கச் சே கடன் வாங்கினுத்தானே இந்த அசட்டெ நீட்டின எடத்திலேல்லாம் கையிழுத்துப் போடச்சொல்லி நாளைக் கித் தலையிலே சொமத்தலாம். அப்படி யிருக்கு அவா யோசனே. இந்த அம ளாங்கு "எங்க அண்ணாவைப் போலே ஆகுமா, எங்க மன்னிக்கி சமானம் இந்த லோக்கத்திலே யாரிருக்கா"ன்னு சொல்ரபோதே வாயெல்லாம் பல்லாப் போரது.

சீ :—ஐயாயிரம் பதினாயிரம்னு தலெ தெரியாமெக் கடன் வாங்காதுன்னுப் பேசாமெயிருந்துடுவேம் போலே ருக்கு ! அப்படி புத்தியில்லாமெப்போயிடல்லேடீ, அம்மா !

ரா :—அடே, அவகிட்ட பாயாரத் திலே பிரயோசனமில்லெ. இப்பொ சமத்தாத்தான் பேசுவே. ஆனு, ஐயாயிரம் பதினாயிரம்னு மொத்தமாவா கடன் வாங்கப்போரான் ? சன்னஞ் சன்னமா ஏறும். மொதல்லெ ஒரு பொண் கலியாணத்துக்குன்னு வாங்குவன், அப்பரம், இல்லியா, ஆடின்னும், ஆராமரசம்னும், தீபாவளின்னும் ஒண்ணும் பின்னெ ஒண்ணு வரவரக் கைமாத்து வாங்கவேண்டியதுதானே, பாங்கிலேயா போட்டிருக்கு ? எங்கைக் கணக்கு, 400 ரூ. வருஷம் ஆருச்சு இன்னம் தீக்காரத்துக்கு வழியில்லியே அவனுக்கு. காலாவதியாகித் தொலைஞ்சு போயிடப் போரதேன்னு நான்னு கையிலேருந்து ஒரு ரூபாயைக் கொடுத்து அவன் குடுத்ததுபோலே வரவு வெச்சுண்டு வரவேண்டியிருக்கு. ஏன், வருஷா வருஷ வரும்படியிலே இந்த சொல்பத் தொகையைக் கொடுக்கப்படாது ? வருஷத்துக்கு ஆயிர ரூபா வரும்படி வர்ரதே.

சீ :—வரவுக்குஞ் செலவுக்குஞ் சரியாத்தான் போரது.

ரா:—அதெத்தான் சொல்லவந்தேன். அவனுக்கு ஸம்ஸாரம் வலுத்துப் போச்சு, முழுசொத்தையும் ஆண்டாத் தான் சௌகரியமாக் காலக்ஷேபம் பண்ணலாம். நாளைக்கி அந்த சொத்து பேரிலே கடனும் வாங்கலாம். அவன் அப்படி நெனெக்காது சகஜம்தானே. ஒனக்குன்னு தெரியணம், ஒனக்கெது நல்லது, எதுகெட்டதுன்னு ?

சீ:—ஆமாம், அத்திம்பேரே, அதுக்காக என்னபண்ணச் சொல்லரேள் ?

ரா :—நான் ஒண்ணும் பண்ணச் சொல்லல்லே அப்பா. நாளைக்கி, "நாங்க அண்ணந்தம்பி அன்னியோன்னியமா யிருந்தது அவனுக்கு ஆகல்லே, கிருகச்சித்ரம் பண்ணவந்துட்டான்"னு ஒங் கண்ணு வாயாலே வெசவுகேக்க வாண்டாம் எனக்கு. ஊர்லே நாலுபேர் சொல்லக்கூடியதைச் சொன்னேன். அவ்வளவுதான். நீதான் எல்லாத்தையும் யோசிச்சுத் தீர்மானம் பண்ணிக்கணம். பொரத்தியார் இந்தமாதிரிக் காரியங்களிலே தைரியம் சொல்ல முடியாது.

ல :—தைரியம் என்ன, பிரமாத தைரியம் ! சீதாராமன் ஆம்புள்ளெயில்லியோ ? அவன் காரியத்தெ அவன் பாத்துக்கமாட்டானோ ? அண்ணு கை விட்டுட்டா செத்துப் போய்டுவனோ ?

ரா :—செத்துப் போய்டுவன்னு நான் சொல்லல்லே, அவன்னு பயப்படராப்

பிலேருக்கு ? அப்படி நடுங்கரவனுக்குள்ளே நாமென்ன பூந்துக்கரதா ?

சீ :—(ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போல்) என்ன அத்திம்பேரே! என்னெ ரொம்ப அசடாக்கிப்படரேளே ! அண்ணா காலுங் கிழேயே எப்போதும் இருக்கணும்னு சொன்னேன் ? ஏதோ கொழந்தெலேருந்து எடுத்து வளத்தானே, அம்மா மொகமே தெரியாத என்னேன்னு —நெனைக்கரபோதுதான் கொஞ்சங் கஷ்டமாயிருக்கு. அதுனாலே இத்தனெ நாளா வெலகரத்துக்கு மனசு வரல்லியேயொழிய, நீங்க சொல்ரதெல்லாம் எனக்குத் தெரியாம இல்லெ. சரி, இப்பொ என்ன பண்ணலாம் ?

ல:—பண்ணரதென்னடா, காலம்பர மோந்தனூர்க்குப் போய்ப் பாத்துப்புட்டு “கார்த்திமாசம் வேறெ ஜாகை போடரேன், அதுக்குத் தகுந்த ஏற்பாடோடே வா”ன்னு சொல்லிப்பிட்டு வா.

ரா :—ஆமாம், ஜாகை போட்டா சாப்பாட்டுக்கு வழி ?

ல :—இதென்ன கேழ்வெ ? அவன் வீதத்துக்கு வருஷத்துக்கு முன்னூறு கல நெல்லு வரல்லியோ ?

ரா :—அவன் வீதம்னு புரிச்சுப் போட்டிருக்கோ ? இவன் ஒண்ணுஞ் சொல்லாமெ ஜாகை போட்டா, அவ அண்ணன் கழுக்குலிக்கியாட்டமாப் பேசாமெ இருக்கான்.

சீ :—அப்படின்னா, இப்பவே ஒரு விதாயம் பண்ணிப்புட்டாப் போரது.

ரா :—(தனக்கேற்பட்ட உற்சாகத்தை முழுவதும் மறைக்க முடியாதவராய்) அதெத்தான் சொன்னேன் இத்தனெ நாழி.

சீ :—இதென்ன பிரமாதமான காரியமா என்ன ? கணக்குப்புள்ளெகிட்ட நம்பர் வாரியெக் கேட்டு ரெண்டு பட்டி குறிச்சுப்பிட்டா, ஒரு நாழிலே முடிச்சுடலாம்.

ரா :—பட்டி எழுதரது நாழியாயிடாதுடா. மொதல்லெ இருக்கர செடுக்குகளைத் தீர்த்துண்டுன்னா ஆகணம் ?

சீ :—அதெல்லாம் ஒண்ணும் பிரமாதமா யில்லெ. எல்லாத்துக்கும் நீங்க வந்துதான் ஆகணும். அவனிண்டே இந்த விஷயத்தை நேரப் பேசாதுன்னா எனக்கு என்னமோபோலேருக்கு.

ரா :—அடாடா, இதிலெ என்னெ வந்து மாட்டிக்கச் சொல்லரயே. எம் மண்டேன்னா நாளைக்கி உருளும் ?

ல :—மண்டெ உருளரதென்ன! காயத்தெ எடுத்துச் சொல்ரத்துக்கு ஒத்தர் வாண்டாமோ? கொழந்தைக்கித் தான் வேறெ யார் இருக்கா மனுஷா ? சீதாராமா ! நீ மோந்தனூருக்குப் போய்ட்டு நாளைக்கி வரத்தே இப்படி வா. அவனையும் வரச் சொல்றேன். இம்மே, எளவழக்கம் வாண்டாம் ; வெட்டொண்ணு துண்டு ரெண்டுன்னு காரியத்தெ முடியுங்கோ. (இவ்விதம் தீர்மானித்து எல்லோரும் படுத்துறங்குகிறார்கள்.)

(திரை) (தொடரும்)

சிறு கதை

# சிந்தனையும் செயலும்

[கே. வெங்கடாசலம்]

எல்லாம் கனவுபோல இருக்கிறது. இந்த வாழ்க்கையின் மேடு பள்ளங்களில் மனமென்னும் கட்டைவண்டி சிரமப்பட்டுக் கொண்டு செல்லுகிறது. ஆனால் எப்பொழுதும் போய்க்கொண்டேயிருக்கிறது : ஆச்சரியம்தான். இப்பொழுது அவன் எண்ணுகிறான், அந்தப் பள்ளத்திலேயே வண்டி விழுந்து விடக்கூடாதா என்று. இதெல்லாம் நம் கையில்தானா இருக்கிறது ? வண்டி மீண்டும் மேட்டுக்குத் தாவ முயற்சி செய்கிறது ; தாவவும் தாவுகிறது.

அந்தச் சம்பவம் அவன் வாழ்க்கையில் ஏற்பட்ட படுகுழி ; 'கிடு கிடு' பாதாளமென்று கூடச் சொல்லலாம். இப்பொழுது அது கனவாகத் தான் தெரிகிறது. ஆனால் அது நினைவுக்கு வரும்போதெல்லாம் அவன் மனமும் சோகக்கடலில் ஆழ்ந்து விடுகிறது.

* * *

சங்கரனின் முதல் விவாகம் இள வயதிலே நடந்துவிட்டது. மனைவி ஒரு உபாத்தியாயினி. வயதுக்கேற்ற அழகு. இளம் தம்பதிகளிருவரும் கருத்தொருமித்து வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தனர். அவளுடைய களங்கமற்ற பேச்சு அவனை மட்டுமன்றி ஏனைய பந்து மித்திரர்களையும் வசியப்படுத்திற்று. அவள் ஏனோ அவ்விதம் எல்லாருடைய அன்பையும் விரைவில் பெற்றுவிட்டாள் !

அவனுக்கு ஆபீஸில் குமாஸ்தா உத்தியோகம். இருவருடைய சம்பளமும் குடும்பச் செலவுக்குத் தாராளமாக இருந்தது. வீட்டில் ஒரு வேலைக்காரி, சகல வேலைகளையும் கவனிக்க. இருவரின் சாயங்கால வேளைகள் கடற்கரைகளிலும், பார்க்குகளிலும், சினிமாக் காட்சிகளிலுமாகக் கழிந்தன.

சங்கரனின் நினைவெல்லாம் சதா அவளைப் பற்றியது. அப்படி எண்ணும்போது ஒரு பயங்கர நினைப்பும் கூடவே வந்துவிடும், நிழலைப்போலே. உண்மையில் அவள் அழகிதான். என்றும் அவன் கண்களுக்கு என்னவோ அமானுஷிக அழகியாய்த் தெரிந்தாள். ஒளிபடர்ந்த முகம், வனப்பு மிக்க மூக்கு, கருவிழிகள்.—ஏன் ?—அவள் ஒவ்வொரு அங்கமும் அவனுக்கு அவளைத் தெய்வலோகத்துப் பெண்ணாகவே காட்டிற்று. அவள் காதுகளுக்கென்றே அமைந்தனபோல அந்த இரு 'லோலக்'குகளும்இருந்தன. அவள் அணிந்திருந்த நகைகள் என்னவோ சொற்பந்தான். ஆனால் அவள் அழகுமட்டும், போட்டிருந்த நகைகளுக்குப் பன்மடங்காகப் பிரகாசித்தது. காலில் அணியப்பெற்ற பாதசரம் 'ஜல்க், ஜல்க்' என்று தொனி எழுப்பும்போதெல்லாம் சங்கரனின் மனக்கண்முன் ஊர்வசிதான் வந்து நிற்பாள் ! அதிலே அவன் அடைந்த விம்மிதம் கொஞ்சமோ !

இருந்தபோதிலும் அவன் மனசு மட்டும் சமயா சமயங்களில் நிலைகொள்வதில்லை. அவள் ஏன் இப்படி அழகாயிருக்கிறாள் ? இது என்றைக்கும் நிலைக்குமா ?' அர்த்தமில்லாத இத்தியாதி கேள்விகளைப் போட்டு மனத்தைக் குழப்பிக் கொள்வான். இரவில் அயர்ந்த நித்திரையும் கலைந்து எழுந்து அவளைக் கூர்ந்து நோக்குவான். அவள் அதரங்களில் புன்னகையின் ரேகை ஊடுருவிச் செல்லும், தூக்கத்திலுங் கூட. அப்பொழுது நிம்மதி யடைந்து மீண்டும் துயில் கொள்வான்.

அவன் ஏன் இவ்விதம் பயந்து சாகிறான்? தன்னிடமிருந்து சாவு என்ற கொடிய அரக்கன் அவளைப் பிரித்து விடுவானோ?—என்று ஒவ்வொரு கணமும் கலங்குகிறான். இயற்கையே இப்படித் தானோ? அதீதமான எதையும் யாராகிலும் அபகரித்து விடுவார்களா, என்ன?

அன்று ஆபீசிலிருந்து வீட்டுக்குத் திரும்பியவன் திடுக்கிட்டுப் போனான். காரணம் அவள்தான். தலையில் ஈரத் துணியைக் கட்டிக்கொண்டு அவனை எதிர்பார்த்து வாசற்படியில் நின்றாள்.

"பார்வதி! என்ன? மண்டையில் ஏன் கட்டு?"

"உடம்பு ஒருமாதிரி யிருக்கிறது' தலைவலி; ஜலதோஷமுங்கூட."

"சரி; படுத்துக்கொள், காப்பி போட்டுத் தருகிறேன்."

அவள் படுத்துக்கொண்டாள். அன்றிரவு பூராவும் சங்கரனின் கண்கள் மூடவில்லை. ஒருவிதப் பதற்றத்துடன் சிகிச்சை செய்தான்.

ஆனால் அவள் உடம்பு, எண்ணியபடி சொஸ்தமாகவில்லை. மார்பில் சளி பிடித்துத் தொல்லைப்படுத்திற்று. சங்கரன் டாக்டரை அழைத்து வந்தான். அவர், காச நோயின் அடையாளங்கள் தென்படுவதாகக் கூறினார். சங்கரன் அப்படியே அதிர்ந்து போய்விட்டான்.

அந்த வியாதி அவளுக்கு எப்படித் தான் வந்ததோ? பதினைந்து நாள் என்றால் அதிகம். அவள் மேனி வாட ஆரம்பித்துவிட்டது. கன்னங்களில் பள்ளம் விழுந்தது; கண்கள் ஆழத்துக்குள் போயின. அவள் அழகெல்லாம் படிப்படியாக உருக்குலைந்தது.

சங்கரனின் மனத் தளர்ச்சியும் நாளுக்கு நாள் அதிகரித்தது. எல்லா


உங்களுக்குத் தெரியுமா?

- உங்களுக்கு முதுமையில் உதவி வேண்டியிருக்கும்.
- உங்கள் குழந்தைகள் படிக்க வேண்டும்.
- உங்கள் புத்திரிகளுக்குச் சீர் செய்யவேண்டும்.
- மொத்தத்தில் உங்கள் குடும்பத்தின் சந்தோஷமே கடன் தொல்லையற்ற வருமானத்தைப் பொறுத்திருக்கிறது.

இதையெல்லாம் உங்களுக்கு அளிக்க அவசியமானது

'இண்டோ-யூனியன்'

பாலிஸி ஒன்றுதான்

இண்டோ - யூனியனில் விதவிதமான திட்டங்கள் உள்ளன. உங்கள் பிரச்னைகளைத் தீர்த்து வைக்க அவர்கள் எப்பொழுதும் தயார். அபிவிருத்தி வாய்ந்த இந்த ஆயுள் இன்ஷூரன்ஸ் ஸ்தாபனத்தாரிடம் உங்கள் தேவைகளுக்கு யோசனை கேளுங்கள்.

பாலிஸிதாரர்களின் டிரஸ்ட் பண்ட் — ஒரு விசேஷ அம்சம்

இண்டோ யூனியன் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: மதராஸ்.

கே. எஸ். ராமமூர்த்தி, எம். ஏ., ஜெனரல் மானேஜர்.

வற்றுக்கும்மேலாக அவன் கண்ணெதிரே அவள் வனப்பு பாழாவதை அவனால் சகிக்க முடியவில்லை. ஒரு நாள் மாடியில் உட்கார்ந்தபடியே சிந்தனையில் ஆழ்ந்தான். எதைப் பற்றிய சிந்தனை? எதிரே அவளுடைய எழிலுருவம் படமாகத் தொங்கிற்று. அதற்கும், படுக்கையில் வாடும் பார்வதிக்கும் எத்தனை வித்தியாசம்? படத்தைக் கையிலெடுத்து உற்றுநோக்கினான். அவன் கண்களிலிருந்து நீர் 'மளமள'வென வடிந்தது. இந்தக் காட்சியை யாராவது பார்த்தால் அவனுடைய பரிதாபநிலைக்கு இரங்காமலிருக்க முடியுமா? தனிமையில் அவன் தன் மனத்துயரங்களைச் சொல்லி அழுதான். இதைப் பார்வதி கவனிக்காமலில்லை. அவள் அஸாதாரணப் பெண் அல்லவா?

நிலையற்ற சௌந்தரியத்திற்காக எத்தனை கவலை? நோயுடன் மனக்கவலையும் சேர்ந்து கொண்டது, தீயுடன் புயலும் கலந்து கொண்டதுபோலே. பலன் என்னவாக இருக்கமுடியும்? வெந்து சாம்பலாகிவிட வேண்டியதே! பார்வதி அதிக நாள் வாழக் கொடுத்து வைக்கவில்லை. அழகு என்ற புனை பெயர் சூடிய அக்கொடிய சூலாயுதத்தினால் சங்கரனின் நெஞ்சைப் பிளக்கவே அவள் ஜனித்தாள் போலும்!

அந்திக் காலம்: உலகத்திலிருந்து ஒளித்தேவன் விடைபெற்றுக்கொண்டு அகலும் பொழுது; அவன் ஸ்தானத்தை ஆக்கிரமித்துக்கொள்ள இருள் வாயைப் பிளந்துகொண்டிருந்தது. பார்வதி அவனை விட்டுப் பிரிந்தாள்: இல்லை, சாவு இரக்கமற்ற தன் கரத்தால் பிரித்து விட்டது. ஒரு வருஷம்தான் பழக்கம்; எனினும் யுக யுகமாகப் பழகியது போன்ற உணர்ச்சி. சங்கரனிடம் குடி கொண்டிருந்தது. அன்று தொட்டு அவன் தன் வாழ்க்கையும் ஸாரமற்றுப் போனதாகக் கருதினான்.

* * *

அவள் இறந்து இரண்டு வாரங்கள் கழிந்தன. ஒரு தினம் தற்செயலாக அவள் பெட்டியைக் கிளறிக்கொண்டிருந்தான். அதிலே ஒரு கவரில் ஏதோ பத்திரமாக வைக்கப்பட்டிருந்தது. திறந்து பார்த்தான். அது பார்வதியின் உயிரை மதிப்பிடும் விலைப் பத்திரம்; இன்சூரன்ஸ் பாலிஸி. கண்களில் நீர் ததும்ப அதைப் பார்த்தான். அவள் விட்டுப்போனது அது ஒன்றுதானா? இல்லை. ஆயிரம் வெள்ளிக்காசுகளை மட்டும் விட்டுப் போய்விடவில்லை. அதன் ஒவ்வொரு விளிம்பிலும் பார்வதியின் அன்பு-முலாம் பூசப்பட்டிருக்குமல்லவா?

பணம் கைக்கு வந்தது. சங்கரனின் மனத்தில் படர்ந்து நின்ற பழைய நினைவுக் கதிர்களும் மறைந்தன. ஆயிரம் ரூபாய்! ஒரு முப்பது ரூபாய்க் குமாஸ்தாவுக்கு எப்படியிருக்கும்? இரண்டாம் கலியாணம்: அப்புறம்...... மனித இயல்பே இப்படி கன்றி கெட்டதுதானா?



# மாயையும் சிதைந்தது

[ரா. சந்திரசூடன்]

சாவு என்பது சர்வ சாதாரணம். பிறப்பு என்பது சாவு என்பதன் ஆரம்பம் என்று யாரோ எங்கேயோ எழுதி வைத்துவிட்டு, அது பொய்யாகாமல் தானும் இறந்திருக்கிறார். நான் மிக்க அன்பு வைத்தவர்களில் சிலரும், இன்னும் அரைகுறையாகத் தெரிந்தவர்களில் பலரும், விண்ணுலகடைந்தபின், அவர்கள் சவங்களைக் கவனித்திருக்கிறேன். எல்லாம் மாயை. அந்த மாயையில் நான் ஏன் என் துக்கத்திற்கும், வருத்தத்திற்கும் ஒரு மாயையைச் சிருஷ்டித்துக் கொள்ளக்கூடாது?—என்பது என் தர்க்கம். அவர்கள் எல்லோரும் நெடுந்துயிலில் ஆழ்ந்திருக்கின்றனர்; நாளையோ, நாளை நின்றே, அல்லது அதற்குஅடுத்தாற்போலவோ, எழுந்து விடுவர்! அவர்கள் உறங்கி நான் பார்த்ததில்லையா? அம்மாதிரிதானே இந்தக் கோலத்திலும் இருக்கின்றனர் என்ற மனத் தேறுதல்கொண்டிருக்கிறேன்.

இந்த வியாக்கியானம் இரண்டு நாட்களுக்கு முன் இறந்து என் அறையில் கிடந்த ஒரு சிட்டுக் குருவியின் உடலைக் கண்டதும் சிதறித் தூளாயிற்று.

* * *

தமிழ் நாட்டில் அதிகமாக நான் சிட்டுக் குருவிகளைக் கவனித்ததில்லை. பங்களூரில் அவை கூட்டங் கூட்டமாக என்னுடன் வசித்து வந்திருக்கின்றன. ஹிமாலயத்தில் பனிச் சிகரங்களுக்குப் பக்கத்தில் கூண்டுபோல் தொத்திக் கொண்டிருக்கும் 'சிம்ளே'யிலும், கீழே 'தெஹ்லி'யிலும் அவை எனக்குத் துணைவர்களும் துணைவிகளும். ஆனால் நான் பறவையல்ல, சிட்டுக் குருவியல்ல. அவைகள் சகித்துப் பொறுத்து கூட்டுரிமை தந்த ஜீவன்களுள் ஒன்று. பல சமயங்களில் அந்த ஜீவராசிகளுள் ஒன்றாக இல்லையே என்று ஏங்கியிருக்கிறேன். அவைகளிடம் அத்யந்தப் பிரியம் கொண்டவன். என் சுதந்திர தாகம் அவைகளின் சுதந்திரத்தைக் கண்டு ஊற்றுப்போல் பெருகியிருக்கிறது. ஆத்ம நண்பர்களிடமும் சொல்லத் தயங்கும் வாழ்க்கை-ரகசியங்களைக் குறுக்கிட்டுப் பேசாமல் கவனமாகக் கேட்டுக்கொள்ளும் அச்சிறு குருவிகளிடம் சொல்லி மனப்புண் ஆற்றிக் கொண்டிருக்கிறேன்.

சிம்ளேயில் குளிர் பிரியும் நாட்களில் நடுப்பகற் பொழுதுக்கு முற்றத்தில் வெயிலில்உட்கார்ந்து சாப்பிடுவது வழக்கம். 'என் நண்பர் குழா'மும்சாதம் சாப்பிடும் நேரம் அது. அவற்றின் தைரியத்திற்கு நாம் பிச்சையெடுக்க வேண்டும். என் தட்டிற்கு அருகில் கும்பலாகக்கூடிக் கொள்ளும். என்னுடன் நாக்கைத் தீட்டிக்கொண்டு சாப்பிடுவதற்கு வருவதாகவே அவை தோன்றுது. அகஸ்மாத்தாக அங்கு ஏதோ அலுவலில் வந்தாற்போலக் குவிந்துகொள்ளும். என் சமையற்காரன் எனக்கு ஏதாவது கொண்டு வரும்போதெல்லாம் சட்டென்று பறந்து அவன் கை எட்டாத தூரத்திற்குப் போய்விடும். அவனிடம் சிறிது பயமுண்டு. அவன் அடுப்பண்டைக்குத் திரும்பினால் இவை என்னை மறுபடி சுற்றிக்கொள்ளும். எனக்கு உள்ளுக்குள்ளே இவைகளிடம் லவலேசம் அச்சமும் உண்டு. எல்லாமாகச் சேர்ந்து என்னை அலகாலும், நகத்தாலும் எதிர்த்தால் நான்தான் தோல்வியடைவேன்!

அதனால் சேம்பர்லின் அனுசரித்த சாக்ஷாத் 'மியூனிக்' சூழ்ச்சியைக் கைக்கொண்டிருந்தேன். சிறிது சிறிதாகச் சாதத்தையும், கறிகாய்களையும் வாரிப் பக்கத்தில் இறைத்துவிட்டுத்தான் என் வயிற்றுப் பகாசுரனைக் கவனிப்பேன். தங்

களுக்குள் ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டும், சண்டை யிட்டுக்கொண்டும் அதைப் புசிக்கும். நான் பாதி சாப்பிடு வதற்குள் அவை தங்கள் பங்கைத் தீர்த்துவிடும். பிறகு சிறிது சிறிதாக என்னிடம் படைபோல் முன்னேறும். அவற்றுள் வயதில் பெரியன முகவாய்க் கட்டையைத் தூக்கிப் பின்னால் பார்க் கும், எனது சமையற்காரன் திரும்பி வருகிறானா என்று. அவன் வருவதற்குச் சற்று நேரம் பிடிக்கும் என்று தோன்றி னால், 'கிரீச்' என்று சத்தம் கொடுக்கும். அவ்வளவுதான். என் தட்டில் அலகை நீட்டி வேண்டியதை எடுத்துக் கொள் ளும் மற்றவை. நான் ஒரு தடங்கலும் செய்யமாட்டேன், விரட்டமாட்டேன்— என்ற தைரியம் அவைகளுக்கு ஊன்றியிருந்தது. அவைகளிலிருந்து எனக்கு அடைக்கலம் அந்த வேலையாள் தான்! ஈவிரக்கமில்லாது கையில் இருப் பதை எடுத்து அவற்றின்மீது வீசி விடுவான். ஆனால் அவன் ஒரு அடி நகருவதற்குள் அவை ஐம்பது அடிக்கு அப்பால் பறந்துபோய்விடும். நான் அவனைக் கண்டிப்பதை அவன் லக்ஷியம் செய்யமாட்டான். சிறு வயதிலிருந்து நிறைய இட்டலியும் வடையுமாக உளு ந்து சாப்பிட்டுச் செவிபுணர்ச்சிக்கு 'சுயராஜ்யம்' கொடுத்து அனுப்பிவிட் டிருந்தான்!

சாப்பிட்டுப் பிறகு படுக்கையில் சென்று படுத்து ரஜாயில் புகுந்துகொள் வேன். அக்குருவிகளுக்கு அப்பொழுது தான் விளையாடும் நேரம்; கூடு கட்டும் நேரம்; தம் சிறு குஞ்சுகளுக்கு உணவு ஊட்டும் நேரம்; அவற்றிற்குப் பறக்கக் கற்றுக்கொடுக்கும் நேரம்; ஆண் பெண் இனங்கள் உல்லாசமாகக் காலம் கழிக் கும் நேரம்; தங்களுக் கிடையில் உள்ள சண்டை சச்சரவுகளைத் தீர்த்து அன் றைப்பொழுதுக்குச் சமாதானம் செய்து கொள்வதற்கும் நேரம். "ஏதடா, இவ் வெல்லாம் ஆபீஸில் வேலை செய்திருக் கிறானே, சற்று அவன் தூங்கிக் கொள் ளட்டுமே!" என்றுசிறிதாவதுஎன்னிடம் இரக்கம் கொள்வதில்லை. தாங்களெல் லாம் குதூகலமாக இருக்கையில் இவன் எதற்காக மதாந்தமாக இப்படிக் கிடக் கிறான் என்று அவை எண்ணுவது சகஜந்தானே!

அவை கூடுகட்டும் விதரணையைப் பார்க்கவேணும்! ஆனால் அதற்கு அவை பொருள் சேகரிப்பதைக் கண் டால்தான் எனக்குக் கோபம் வரும். பஞ்சு போலவோ, நூல் போலவோ, கயிறு போலவோ எது தோன்றினாலும் அவற்றையெல்லாம் எடுத்துச் சென்று விடும். என் போர்வையின் அருகில் உள்ள குஞ்சங்களையெல்லாம் குத்திக் குதறிக் கத்தரித்து எடுத்துச் சென் றிருந்தன. இப்பொழுது போர்வையின் அருகுகளையே சிதைத்து ஜீரணம் செய் கின்றன. இது போதாதென்று என் அறுந்த கயிற்றுக் கட்டிலில் வந்து உட் கார்ந்துகொண்டு கொஞ்சங் கொஞ்சமாக முறுக்கேறின கயிற்றைக் கொத்தி வெட்டிச் சிறிது சிறிதாகப் பிய்த்துத் தம் கூண்டிற்கு அகற்றிவிடும். பிரிந்த நூல்-கண்டு ஏதேனும் தவறி மேஜை மீது வைத்தால் அனர்த்தம் வந்துவிடும். குருவி பிரித்த நூலைப் பட்டையில் மறு படி சுற்றக் குறைந்தது ஒருமணியாவது ஆகும். இங்குமங்கும் 'வெள்ளி' கண்ட என் தலையைக் கவனிக்க மட்டும் இது வரை அவை துணிந்ததில்லை!

கூடுகட்ட முதல் நடையில் வைக் கோல் துரும்புகளும், சிறு குச்சிகளும், மெல்லிய இறகுகளும் ஆண் குருவி எடுத்துச் செல்லும். என் நண்பர் சிக ரெட் பற்றவைத்து எறிந்த நெருப்புக் குச்சிகளுக்கும் இதில் கிராக்கி. இவை சேகரித்தபின், பெண் பறவை வெளியே கிளம்பி ஈரமண் கொணர்ந்து அந்தச் சாமான்களைச் சுற்றிப் பூசி ஒரு கிண் ணம்போல் செய்யும். என் தாயார் மண் அடுப்புக் கட்டுவது எனக்கு ஞாப கம் வருகிறது. பெண்களுக்கே ஈரமண் நயந்து நடந்து கொள்ளும் போலும்! அது காய்ந்த பின், அதற்குமேல் மெல் லிய பருத்தியும், சணல் நாரும், நூலும்

ஆண் பெண் இரண்டுமாகக் கொண்டு சென்று பரப்பும். இவ்வளவிற்கும் இரண்டு மூன்று மணி நேரம்தான் பிடிக்கும்.

கூடு எங்கே பின்னும் என்று எண்ணுகிறீர்களா? இடைக்கேடான இடங்களில்தான். இதில் மட்டும்தான் மூளை சிறிது மந்தம் அவைகளுக்கு. இல்லாவிடில் மனிதவர்க்கத்தினிடம் அபார நம்பிக்கை கொண்டிருத்தல் வேண்டும். அல்லது தனது வசிய சக்தியில் வரம்பில்லாத பெருமை வைத்திருக்க வேண்டும். நம் தலை உயரத்திற்குமேல் எங்கெல்லாம் இடுக்குகள் தோன்றுகின்றனவோ அங்கெல்லாம் 'வீடு' கட்டிவிடும். காலையில் வராந்தாத் தட்டியைச் சுருட்டிக் கட்டியிருப்போம். அதன் நடுவே பொந்தில் பஞ்சும் பிச்சலங்களும் கொண்டு வைத்திருக்கும். மாலை அதை அவிழ்த்து விடும்பொழுது, சில சமயங்களில் அதில் முட்டையும் இட்டிருக்கும். "நீச மனித ஜாதியினருக்குத்தான் நிலப்பரப்பு முழுவதும் வசிக்கக் கொடுத்திருக்கிறோமே! உயரத்தில் வீடு கட்டும் எங்களை அவர்கள் தொந்தரவு செய்ய என்ன நியாயமிருக்கிறது?" என்று பெண் குருவி தன் ஆணிடம் முறையிட்டுக் கொண்டிருக்கிறது. அன்று தட்டி அவிழ்த்து விட்டதில் அதனுள் வைக்கப்பட்டிருந்த இரு முட்டைகள் கீழே விழுந்து உடைந்துவிட்டன!

சில சமயங்களில் நான் படுத்திருக்கும்பொழுது உயிருடன் இருக்கிறேனா, இல்லையா என்ற சந்தேகத்துடன் என் மீது வந்து உட்கார்ந்து கொண்டு துள்ளித் துள்ளிக் குதித்துப் பார்க்கும். இதை இன்னொரு குருவி தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்கும். ஆடு மாடுகளின்மீது சவாரி செய்வது சகஜம். மனித வாகனம் தனித்துக்


# அமிர்தாஞ்சன் லிமிடெட்

**மதராஸ்**

பொன் விழா
ஞாபகார்த்த
மாய் தங்கள்
அன்பு
மிக்க




ஆசி மொழி
களை எங்களு
க்கு அனுப்ப
வேண்டு
கின்றோம்

**அமிர்தாஞ்சன் லிமிடெட்**

7, தம்பு செட்டி தெரு, மதராஸ்

கிடைப்பதென்றால் விடுமா? பொறாமையுடன் இரண்டாவது குருவியும் என் மார்மீது வந்து உட்கார்ந்து கூத்தாடும். நான் கண்களைச் சிறிது திறந்து உடம்பு அசையாமல் இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருப்பேன். இந்த இரண்டு குருவிகளும் சிறிது நேரத்தில் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளும். காமா, இமாம்பக்ஸ் மல்யுத்தம் வெட்கமடையும்படி கட்டிப் புரளும், சில நிமிஷங்கள். எதனுடைய கன்னங்கள் அதிகம் வீங்கின என்று நான் கவனிப்பதற்குள் இரண்டும் பறந்து ஓடிவிடும்.

என் பொருள்களிலெல்லாம் அவைகளுக்குக் கண். கோட் ஸ்டாண்டில் வந்து உட்கார்ந்துகொண்டு தங்கள் மலஜல உபாதிகளைக் கழித்து வண்ணானுக்கு வேலை வைத்து விடும்! கண்ணாடியில் தன் அழகைப் பார்த்துக் கொள்ளும். தான் ரம்பை என்றல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறது? கண்ணாடி அதன் ஸ்வரூபத்தைக் காண்பிக்கும். அது புகழ்ச்சிக்கோ பெருமைக்கோ இடம் தராது. ரௌத்ராகாரம் மூண்டுவிடும். அல்லது ஆண் குருவி கண்ணாடிக்குள் தெரிவது தன் துணைவி என்று நினைத்து வருந்தி அழைக்கும். கண்ணாடிக்குப் பின் புறத்திலிருக்கும் பெண் இனம் வராமல் போகவே, ஆண் சினங்கொள்ளும். எப்படியிருந்தாலும் சரி, அன்று கண்ணாடி அதன் அலகின் பலம் தாங்காது முதலாகிவிடும்!

சேர்ந்தாற்போல் ஐந்து நிமிஷங்களுக்கு ஒரு நிலையில் அது நின்று நான் பார்த்ததில்லை. அணில்போல் எப்பொழுது பார்த்தாலும் சுறுசுறுப்பாகவும், இங்குமங்கும் பறந்து கொண்டும், சத்தமிட்டுக் கொண்டும், சில்லறை விஷமம் செய்து கொண்டுமிருக்கும். இக்குணங்களில்லாது ஒரு குருவியைக் குருவி ரூபத்தில் மட்டும் பார்க்கமுடியும் என்று எனக்குத் தோன்றினதில்லை.

* * *

சலன சொரூபமான அப்படிப்பட்ட ஒரு சிட்டுக்குருவிதானா இப்பொழுது சப்த நாடிகளும் அடங்கி, மரகதம்போல் பளபளவென்று ஒளி சிதறும் கண்களடைந்து, கால்கள் சோர்ந்து தொங்க, தலை சாய்ந்து, ஒரு பக்கமாக ஒண்டிக் கீழே கிடக்கிறது! என் பார்வையை நம்பமுடியாமல் அந்த உருவத்தைக் கையில் எடுத்தேன். கூடுவிட்டுக் கூடுபாய்ந்து வெகு நேரம் ஆகியிருந்தது அதன் ஜீவநாடி. எந்தப் புதுக் கூட்டில் அது சென்று அடங்கியிருக்கிறது என்று இரண்டு நாட்களாகத்தேடித்தேடி அலைந்து மனச் சோர்வு கொண்டதுதான் மிச்சம் எனக்கு. போன உயிர் மீளாது எனத் தெளிந்த பின்னர்தான் அச்சவத்தை அடக்கம் செய்தேன். எப்பொழுதும் எனக்குப் புகலிடமாக இருந்த என் மாய சிருஷ்டியும் என்னைக் கைவிட்டு மறைந்துவிட்டது இச்சமயம்.



பொது ஜனங்களுக்கு லிவர்
பிரதர்ஸ் கம்பெனியாரின்
அறிக்கை நெ. 1

# அதிக விலை கொடுக்காதீர்கள்



# வீணாக்காதீர்கள்

தேவைக்குத் தகுந்தபடி சோப் உற்பத்தி செய்வதில் தற்சமயம் எங்களுக்கு சிறிது கஷ்டமுண்டாகி வருகிறது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. சண்டைக்கு முன்பு அந்நிய தேசங்களிலிருந்து சோப் வந்துகொண்டிருந்தது. ஆனால் இப்பொழுது அந்நிய நாட்டு சோப் இந்தியாவுக்கு வரமுடியாது. போகவே உங்களுடைய தேவைக்கு வேண்டிய சோப் இந்திய சாலைகளிலிருந்தே ஈடு செய்யவேண்டி இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக சோப் தயாரிப்பதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் சண்டைக்கும் வேண்டி இருப்பதால், யுத்த ஸ்தாபனங்களின் தேவைக்குத் தகுந்தபடி சோப்பின் உற்பத்தியும் கட்டுப்படுத்தப் படுகிறது. இத்தனைக் கஷ்டங்களிருந்தாலும் உங்களுக்குப் பிரியமான சோப் இந்தியாவில் எந்தப் பட்டிணத்திலும் கிடைக்கும்.

## விலைகள்

சண்டை ஆரம்பமான பிறகு மூலப் பொருள்களின் விலை அதிகமாகி விட்டபடியால் அதற்குத் தகுந்தபடி சோப்பின் விலையும் அதிகப்படுத்த வேண்டியிருக்கிறது. சோப் உற்பத்தியில் கொள்ளை லாபம் ஒன்றுமில்லை; உண்மையில் விலையை அதிகப்படுத்தாமலிருக்க எல்லாவித முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப் படுகின்றன. ஸ்டாக் குறைவான சமயங்களில் கொள்ளை லாபம் அடிக்கும் வியாபாரிகள் சிலர் தங்கள் இஷ்டம்போல் விலையை உயர்த்தினார்களென்று எங்களுக்குத் தகவல் கிடைத்தது. ஆனால் நியாயமான விலைகளை அடிக்கடி நாங்கள் விளம்பரப் படுத்துகிறபடியால், நீங்கள் சரியான விலைக்குமேல் கொடுக்கக்கூடாது. இவ்விதம் செய்வதால் எங்களுக்கு நீங்கள் உதவி செய்வதோடு, கொள்ளை லாபம் அடிப்பவனையும் தடுக்கலாம்.

## உலர்த்தி வையுங்கள்

சோப்பை வீணாக்கக் கூடாது. உபயோகிக்கும் பொழுது சோப்பை தண்ணீரிலேயே போட்டுவிடாதீர்கள். உபயோகிக்கும் நேரம் தவிர மற்ற காலங்கள் சோப்பை உலர்த்திவையுங்கள். சேர்ம்பின் கடைசித் துண்டையும், கொஞ்சம் தண்ணீரில் நனைத்து புதிய கட்டியில் ஒட்டினால் அது ஒட்டிக்கொள்ளும். இந்தவிதமாக கொஞ்சங்கூட வீணாக்காமல் சோப்பை உபயோகிக்கலாம்.

## நாங்கள் வாக்களிக்கிறோம்

லிவர் பிரதர்ஸ் கம்பெனியார் கடைகளில் ஸ்டாக் இருக்கவும், கூடியவரை விலை குறைவாக இருக்கும்படியாகவும் ஏற்பாடு செய்யவும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். இதுதான் நாங்கள் உங்களுக்குச் செய்யும் உபகாரம். சென்ற நாற்பது வருஷங்களாக இந்தியாவிற்கு இந்த ஊழியம் செய்வதில் எங்களுக்கு எவ்வளவோ பெருமை.

## லிவர் பிரதர்ஸ் நல்ல சோப் உற்பத்தி செய்பவர்கள்

ஸன்லைட் • லைப்பாய் • லக்ஸ் டாய்லெட் • லக்ஸ், லைப்பாய் டாய்லெட் • விம் • மங்கி பிராண்டு

# மஹாமஹோபாத்யாய குப்புஸ்வாமி சாஸ்திரிகள்

(151-ம் பக்கத் தொடர்ச்சி)

அலங்கார கிரந்தங்கள் தென் தேசத்தில் அதிகமாக வழங்காமலேயிருந்தன. இவைகளை வழங்கச்செய்தவர் இப்பெரியாரே. கல்விச் சாலைகளில் படிப்பு-அட்டவணையில் இந்நூல்களை முக்கியமாகச் சேர்த்ததே இவர்தான். இந்நூல்களினுடைய ஆழ்ந்த தீர்மானங்களைப் பல வருஷங்களாகச் சிஷ்யர்களுக்கு நன்கு புலப்படுத்தியதும் இவர் திறமையே ஆகும். பல பிழைகளைச் சீர்திருத்தஞ்செய்து நன்கு அச்சிட்டு நல்ல விரிவுரையான கௌமதி என்கிற வியாக்யானத்தோடு, சந்தேகம் தெளிவிக்கும் 'உபலோசனம்' என்கிறஉரையும் எழுதி, அத்துடன் சேர்த்துப் பதிப்புச்செய்யப் பெரிய முயற்சி எடுத்தவரும் இவரே.

இதுவுமல்லாமல், இக்காலத்து ஆராய்ச்சி முறைகளையும் நன்கு பயின்றவர். Comparative Philology என்று இக்காலத்தில் சில வருஷங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாஷா தத்வ சாஸ்திரத்தையும் படித்துப் புலமை அடைந்தார். இவரைப் போன்ற ஸர்வதோமுகமான பரந்த கல்வி உடையவர்கள் இந்தியாவிலேயே சிலர் தான் இருப்பார்கள் என்று சொல்லலாம்.

ஆனால் சாதாரணமாகப் பெருத்த அறிவாளிகளாயிருந்தபோதிலும், அவர்கள் கல்வியை மாணவர்களுக்கு நன்கு போதிக்கும் திறமை யுள்ளவர்களாக இருப்பது அரிதேயாகும். இக்கருத்தை மனத்தில் வைத்தே காளிதாஸ மஹா கவியானவர் சிஷ்யர்களின் திறமையினாலேயே ஆசார்யனின் அறிவை அளக்க வேண்டுமென்று கூறுகிறார். ஆமை, மீன், பறவைபோலக் கருதி நோக்கி அன்புடன் சிஷ்யர்களின் புத்தியை வளர்க்கும் ஆசார்யன்தான் மேன்மையுள்ளவன். அத்தகைய உபாத்தியாயர் இவர். ஆதலால் மஹாமஹோபாத்யாய என்னும் பிருது இவரை அடைந்து நன்கு பிரகாசித்தது. குரு சிஷ்யச் சேர்க்கையே உபாஸனைக்கு அருகமானதென்று உபநிஷத் கூறுகின்றது. இந்த அழகிய நிலைமையை, இவரிடம் அனுபவித்து இன்புற்ற பல சிஷ்யர்களும் அறிவார்கள். இவர் தம்முடைய சிஷ்யர்களிடத்தில் வைத்திருந்த அன்பு அளவு கடந்தது. உபாத்தியாய உலகத்திற்கே இவரால் பெருமை ஏற்பட்டதென்று கூறுவது மிகையாகாது.

சாதாரணமாக மற்ற வித்வான்களுக்கு ஏற்படாத ஒரு கடமையும் செலுத்த இவருக்கே நேர்ந்தது. இவர் எந்தக் கல்வியில் ஆழ்ந்த ஞானமுள்ளவராக இருந்தாரோ, அந்தக் கல்வியையே பரப்புவதிலும், அதற்குக் கேடு விளையாமல் காப்பதிலும், அக்கல்வியைக் கற்கும் முறைகளை அமைப்பதிலும், இவர் தமது வாழ்க்கையின் பெரும் பாகத்தையும் உபயோகித்தார். இந்தக் கடமையை இவர் உண்மையுடனும் உறுதியுடனும் ஊக்கத்துடனும் கடவுளுக்குப் பொதுவாக நினைத்து நடத்தியதும், நமக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் தருகிறது. பாரதநாட்டுக் கல்வியில், நம் தேசத்தில், ஈடுபட்டு அன்புடன் உள்ளவர்கள், இவர் அக்கல்விக்குச் செய்திருக்கும் பெருந்தொண்டை எக்காலத்திலும் மறவார்கள்.

சிறு வயதிலேயே மைலாப்பூர் ஸம்ஸ்கிருதக் கலாசாலைக்குத் தலைமை உபாத்தியாயராக இருந்து அக்கலாசாலையை நன்கு வளர்த்தது இவரே. 'திருவாதி' ஸம்ஸ்கிருதக் கலாசாலைக்கும் தலைமைஉபாத்தியாயராக இருந்து ஸ்தாபித்ததும் இவரே. பிரஸிடென்ஸி காலேஜில் ஸம்ஸ்கிருத உபாத்தியாயர் என்கிற உயர்ந்த ஸ்தானத்தை 20 வருஷகாலம் இவர் அலங்கரித்தார். சென்னை விச்வ வித்யாலய ஸபையிலும் இவர் செய்த வேலை போற்றத் தக்கது. அங்கு ஸம்ஸ்

இருதக்கல்வியின் முறைகளையும் உரிமைகளையும் வளர்த்தது இவர்தான்.

கல்வியும் குணமும் ஒழுக்கமும் ஒருங்கே ஒருவரிடத்தில் கண்டால் அவர் கொண்டாடத் தக்கவரே. அப்பழுக்கில்லாத நடத்தையும், அன்பார்ந்த உள்ளமும், தம்முடைய உயர்ந்த கொள்கைகளில் அசங்காத பிடிப்பும், தமக்கு எது சரியென்றும் ஒழுங்கென்றும் தோன்றுகிறதோ அதை எக்காலத்திலும் பயமின்றிப் பேசுவதும், அதன்படி தைரியமாக நடப்பதும் இவருடைய ஸ்வபாவம். இத்தகைய பெரியாரை நாம் இழந்தது நமது பெரும் துர்ப்பாக்கியமாகும். இவர் கீர்த்தி வெகு காலம் இத்தேசத்தில் ஓங்கி விளங்குமென்று நம்பி நாம் ஆறுதல் அடைய வேணும்,





தன் கடமையைச் செய்வதே மனிதனின் முக்கிய லக்ஷியம். கடந்தவைகளைப் பற்றியும் பிற்கால நிலைமையைப் பற்றியும் நினைத்து மனக்கோட்டை கட்டுவது முறையல்ல. பிற்கால நன்மைகளை இன்றே சீர்படுத்திக் கொள்ளல் வேண்டும்.




நீங்கள் உங்களுடைய கடமையைச் செய்தீர்களா?

எங்கள் கம்பெனியில் இன்றே இன்ஷூர் செய்யுங்கள்

நாஷனல் இன்ஷூரன்ஸ்

7, கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா

362, சைனா பஜார் ரோடு, எஸ்பிளனேட், மதராஸ்




# "என்ன செய்வான் பாவம்"

"**ஆலிவர் ட்விஸ்ட்**" என்னும் ஆங்கிலக் கதையில் ஒரு காட்சி

**[ஸ்ரீ. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]**

**வா**லிபன் திரிவிக்கிரமன், தாய் தகப்பன், சுற்றத்தார் அறிந்தவர், யாருமற்ற பரதேசிக் குழந்தை. எடுப்பார் கைப்பிள்ளையாய் வளர்ந்து வந்தான். அவனுடைய திக்கற்ற நிலைமையை அறிந்து ஒரு கள்வர் தலைவன், அவனைத் தந்திரமாய் அபகரித்துச் சென்று தான் திருட்டுத் தொழிலில் பழக்கிவரும் மற்றச் சிறுவர்களுடன் சேர்த்துவிட்டான். திரிவிக்கிரமனுக்குத் தான் வந்திருக்கும் இடமாவது, தன்னைப்போஷிப்பவனின் தொழிலாவது, தன்னுடன் கூடிய தோழர்களின் உண்மையான யோக்கியதையாவது சில நாட்கள் வரை ஒன்றும் தெரியாது.

இந்த நிலைமையில் ஒருநாள் தன் தோழர்களுடன் அவன் கடைவீதியில் திரிந்து கொண்டிருக்கும் போது, ஒரு புஸ்தகக் கடையில் புஸ்தகங்களை வாங்கிப் பார்த்துக் கொண்டிருந்தார் ஒரு கனவான். அவர் சட்டப்பையிலிருந்து திரிவிக்கிரமனுடைய தோழர்களில் ஒருவன் பணமுடிச்சைச் சரேலென்று கிளப்பி மற்றொருவனிடம் கொடுக்க, இருவரும் ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தார்கள். தன் தோழர்கள் ஓடுவதால் தானும் இன்னது செய்வதென்று தோன்றாமல் ஓட எத்தனித்தான் திரிவிக்கிரமன். கனவான் "என் முடிப்பைக் கிளப்பிக்கொண்டு ஒரு பையன் ஓடுகிறான்" என்று கூச்சலிட்டார். உடனே கடையில் உள்ளவர்கள், தெருவில் இருந்தவர்கள் எல்லோரும் கடைசியாய் ஓடும் திரிவிக்கிரமனையே திருடனென்று நினைத்துத் துரத்த ஆரம்பித்தார்கள். அந்தக் கனவானும் பின் தொடர்ந்தார். வெகுதூரம்போய்ப் பையனைப் பிடித்துப் பலவகையிலும் திட்டி அடித்துப் பயமுறுத்திப் போலீஸாரிடம் ஒப்புவித்தார்கள். பையன் இதற்குள் ஓடின களைப்பாலும் பயத்தாலும் மூர்ச்சையானான்.

அத்தருணம் புஸ்தகக் கடைக்குச் சொந்தக்காரன் விரைந்து வந்து "ஐயா! ஏன் இந்தச்சிறுவனை ஹிம்ஸிக்கிறீர்கள்? பண முடிப்பை எடுத்த பையனை நான் பார்த்தேன். அவன் வேறு. அப்

பொழுதே ஓடிவிட்டான் அவன். இவன் ஒரு பக்கம் ஒதுங்கிச் சும்மா நின்று கொண்டிருந்தான். பாவம்! ஜனங்கள் துரத்தவும் பயந்து ஓடினான்" என்றான். அப்போது அந்தக் கனவான் வாலிபன் மீது இரங்கித் தன் கோச்சு வண்டியில் அவனைத் தன் வீட்டிற்கே கொண்டு போய்ச் சிகிச்சை செய்து, சில நாட்களில் அவன் வரலாறு முழுவதும் தெரிந்து கொண்டு அவனைத் தன் அபிமான புத்திரனாக வளர்த்து வந்தார். சில நாட்களுக்குப்பின் அக்கனவான் முன்கூறிய புஸ்தகக் கடையிலிருந்து வந்த சில புஸ்தகங்களைத் திருப்பி அனுப்பவேண்டி, வாலிபன் திரிவிக்கிரமனையே புத்தகங்களுடன் அனுப்பினார்.

இதற்கு மத்தியில் கள்வர் தலைவன் கைநழுவிய வாலிபனைத் திரும்பத் தன் வசமாக்க, நகரெங்கும் தன் திருஷ்டியைச் செலுத்தி வந்தான். அவனுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட சிறுவர் கூட்டத்தில், சொக்கன் என்பவனும் நாகம்மாள் என்பவளும் தொழிலில் தேறியவர்கள். இவ்விருவர்களையும்தான் தலைவன், திரிவிக்கிரமனைப் பிடித்துவரும் பொறுப்பில் நியமித்திருந்தான். அவ்விருவரும் ஊரில் வட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். வாலிபன் திரிவிக்கிரமன் தன் போஷகரான கனவானின் குணாதிசயங்களை நினைத்து மகிழ்ந்துகொண்டு வழி நடக்கும் தருணம், பின்னேயிருந்து ஒருவர் தோள் மேல் கைபோட்டு இழுப்பதை உணர்ந்தான். "ஐயோ! என் தம்பியல்லவா?" என்று அவனைத் தழுவிக்கொண்டாள் நாகம்மாள். "வேண்டாம்; யாரது? தொடாதே என்னை!" என்று வாலிபன் முரண்டிக்கொண்டு திரும்பினான்.

"அடே தம்பி, நல்ல காலம் அப்பா, உன்னைப் பார்த்தேன். உன்னை எங்கேயெல்லாம் தேடுவேன்டா கண்ணே! என் நல்ல காலம்: உன்னை இப்போதாவது கண்டுகொண்டேன். வீட்டுக்கு வாடா அப்பா. ஏன் இந்த அடங்காத தன்மை உனக்கு. என் கண்ணே! வாடா, என் தம்பி வாடா" என்று இழுத்தாள் கண்ணும் கண்ணீருமாய், நாகம்மாள். இதற்குள் தெரு கூடிவிட்டது. ஒருத்தி கேட்டாள்: "என்ன அம்மா, இது?" என்று. நாகம்மாள் பதில் சொல்லுகிறாள்: "என் தாயே! கேள்: இந்தப் பையன் என் தம்பி. தாய் தகப்பனை விட்டு ஓடி ஒரு மாதமாகிறது. காலிப் பசங்களுடன் சேர்ந்து காலாடித்தனமாகத் திரிகிறான்." இதைக் கேட்டு வழிப்போக்கர்கள் வாலிபன் திரிவிக்கிரமனைத் திட்ட ஆரம்பித்தார்கள். "போடா வீட்டுக்கு அந்தப் பெண்ணோடே." "கட்டி உதை இந்தப் பயலை" "ஐயோ, பாவம்! இப்படிப் பிள்ளை பிறந்தால் தாய் தகப்பன்கள் என்ன செய்வார்கள்." "பயலே காயைவிட்டுக் கடிக்கச் சொல்லுவேன். வீட்டுக்குப் போகிறாயா, இல்லையா?" "ஏதுடா கையில் புஸ்தகம்? எங்கே திருடினாய்? போலீஸ்காரனைக் கூப்பிடட்டுமா" என்று இவ்வாறு பலர் பலவிதமாய்ப் பேச ஆரம்பித்தார்கள்.

அப்போது ஒருவன் (நாகம்மாள் தோழன் சொக்கன்) வாலிபனைப் பின்னிருந்து மண்டையில் ஓங்கி ஒரு அடி அடித்துக் கையிலிருந்த புஸ்தகங்களைப் பிடுங்கிக்கொண்டு கரகரவென்று இழுத்துக்கொண்டு, "வா, பெண்ணே! நீ அழாதே. இந்தத் துஷ்டனை நான் உன் வீடு கொண்டுவந்து சேர்க்கிறேன்" என்று கம்பீரமாய் உரைத்தான். பக்கத்திலிருந்தவர்கள் சொக்கனின் தீரத்தனத்தை மெச்சினார்கள். வாலிபன் திரிவிக்கிரமனுக்குப் பேச முடியவுமில்லை. யாரும் அவன் பேச இடம் கொடுக்கவுமில்லை—

# தமிழர் கண்ட புத்தர் பெருமான்

[பி. ஸ்ரீ.]

அவரைப் பார்த்ததும் மனக் குழப்பங்களெல்லாம் எங்கேயோபோய் விடும்; பேராசை முதலான பேய்களும் மறைந்துவிடும். மண்ணென்றும் பொன்னென்றும் வெறிகொண்டு திரியும் பைத்தியம் உயர்ந்த விஷயங்களின்மீதுள்ள லட்சியப் பைத்தியமாக மாறும்.

## அரச மரத்தடியில் அரச ஞானி

அவரோடு அந்த அரசமரத்திற்குங்கூட விசேஷமான பெருமை ஏற்பட்டது.

> அருள் வீற்றிருந்த திருநிழற் போதி
> முழுதுணர் முனிவ !

[போதி - அரசமரம்.]

என்று மரத்தையும் முனிவரையும் சேர்த்துப் பேசுவது வழக்கமாகிவிட்டது. அதன் நிழலில் அந்த ஞானி வீற்றிருந்ததால், அந்த விருட்சத்தை ஞான விருட்சம் அல்லது போதி விருட்சம் என்று அழைத்தார்கள். இப்படி அழைத்தும் திருப்தியடையாமல், 'பெரும்போதி' என்றும், 'மகாபோதி' என்றும் பக்தி விசுவாசத்தோடு குறிப்பிடத் தொடங்கினார்கள்.

அரசமரத்தடியில் ஞான அரசு புரிந்த அந்த அரச ஞானியை, 'மாதவரின் மாதவன்' (மகரிஷிகளுக்கும் மேலான மகரிஷி) என்றும், 'மகரிஷிகளுக்குள்ளே ஒரு சக்கரவர்த்தி' என்றும் கொண்டாடினார்கள்.

அவர் வாயைத் திறந்துவிட்டால் அமிர்தமே பொங்கி வருவதுபோலிருக்கும். அவ்வளவு அருளோடு, அவ்வளவு இனிமையாகவும் உண்மையாகவும் உபதேசம் செய்வார். ஆண்டி அரசன், படித்தவன் படியாதவன்—முதலான வித்தியாசங்களில்லாமல், இதயம் இதயத்தோடு பேசும். அந்தக் கண்கள் எல்லாரையும் சமமாகத் தழுவிக்கொள்வதுபோல் பார்க்கும்; அந்தப் பேச்சு அவரவர்க்கு ஏற்றபடி ஆறுதலளிக்கும். 'தாழ்ந்தவர்' என்றால், அவர்களுக்கும் தாழ்ந்து போய்த் தாங்கி அருள் செய்யும், அந்தக் குளிர்ந்த பேச்சும் பார்வையும்.

> ......முனிவ ! நிற்பரவுதும்......
> ..............................
> ஓங்குசீர் உலகிடை, யாவரும்
> நீங்கா இன்பமொடு நீடுவாழ் கெனவே !

[நிற்பரவுதும் - உன்னைத் துதித்துப் புகழ்வோம், பாடுவோம்.]

என்று ஜனங்கள் பிரார்த்தனை செய்துகொண்டும், அந்த அருளாளரைப் புகழ்ந்துகொண்டும், ஆனந்தமடைவார்கள்.

## புத்த - இருதயம்

ஒருதரம் தரிசித்துப் போனவர்களுக்கும் அந்தக் கருணைக்கடலை மறக்கவே முடியவில்லை.

> எவ்வுடம்பில் எவ்வுயிர்க்கும்
> யாதொன்றால் இடர்எய்தின்,
> அவ்வுடம்பின் உயிர்க்குயிராய்
> அருள்பொழியும் திருவுள்ளம்

[இடர் எய்தின்-வருத்தம் சம்பவித்தால்.]

என்று அவர்கள் புத்த - இருதயத்தை நினைத்து நினைத்து உருகிக்கொண்டேயிருப்பார்கள்.

இப்பெரியார் வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் பௌர்ணமி திதியில் அவதரித்தார். அந்தப் பௌர்ணமியன்று உதித்த பரிபூர்ண ஞான சந்திரனென்று இவரை மதித்தார்கள், இவர் கொள்கையைப் பின் பற்றியவர்கள். ஆண்டுதோறும் இவர் பிறந்த தினத்தில்

சிஷ்யர்களும் அபிமானிகளும் விசேஷமாக இவரைத் தரிசனம் செய்யப் போவார்கள். நெஞ்சிலே பொங்கிக் கண்களிலும் வாக்கிலும் அலையெறிந்த அந்தக் கருணை-வெள்ளத்திலே மூழ்கிக் களித்துப் புத்துயிர் பெற்றுப் போவார்கள்.

## என்ன சோகம்! என்ன தமிழ்!

இப்படி ஒரு பௌர்ணமியில் புத்த-கயாவுக்கு வந்தவர்கள் அடைந்த துயரத்திற்கு அளவேயில்லை. அந்த அரச மரம்—மகாபோதி யென்று அவர்கள் ஆசைதீர அழைத்தது — அப்படியே இருக்கிறது பச்சை இலைகளோடும் புதிய கிளைகளோடும், பார்க்க ரம்யமாய். ஆனால் அதனடியிலுள்ள முனிவரைத் தான் காணவில்லை. சந்திரிகையும் ரம்யமாகத்தானிருக்கிறது; ஆனால் உள்ளத்திலேயுள்ள மயக்க இருளைப் போக்கும் ஞான சந்திரனைக் காணவில்லை. அந்தச் சந்திரன் இந்த உலகத்திலே அஸ்தமனமாகிவிட்டது. புத்தர் மனித வாழ்வையே துறந்து போய்விட்டார்!

தரிசனத்திற்கு வந்திருந்த அன்பர்களும் பிறரும் — ஏற்கெனவே அவருடைய தர்மோபதேசத்தைக் கேட்டுக் கேட்டு ஆனந்தித்தவர்கள்,

மருள் அறுத்த பெரும்போதி மாதவரைக்
கண்டிலமால், என்செய்கோம் யாம்?
அருள்இருந்த திருமொழியால் அறவழக்கம்
கேட்டிலமால், என்செய்கோம் யாம்?
பொருள்அறியும் அருந்தவத்துப்புரவலரைக்
கண்டிலமால், என்செய்கோம் யாம்?

[மருள் - மயக்கம். அறவழக்கம் - தர்மோபதேசம். புரவலர் - அரசர்.]

என்று தாயைக் காணாத குழந்தை போலக் கதறுகிறார்களாம்.

என்ன அருமையான கவிதை! புத்த-இருதயத்தைக் கண்டு காட்டும் தமிழல்லவா, இந்தச் சோக கீதம்?

---

# முருகன்

[சூடாமணி]

பூவுக்குள் மலர்கின்ற
புத்தழகே முருகன்;
பூத்தோறும் கமழ்கின்ற
புதுமணமே முருகன்;
பாவுக்குள் பொலிகின்ற
பண்ணழகே முருகன்;
பார்வதிக்குப் பாலனவன்,
பார்வணங்கும் முருகன்.

காவுக்குள் தவழ்கின்ற
குளிர்தென்றல் முருகன்;
கானகத்தில் கண்கவரும்
காட்சியெல்லாம் முருகன்;
நாவுக்குத் தெவிட்டாத
நல்லமுதம் முருகன்;
நாரணற்கு மருகனவன்,
நமக்கிறைவன் முருகன்.

செந்தமிழின் நந்தவனம்
தந்தமலர் முருகன்;
தென்தமிழர் சிந்தைவனர்
பண்பனைத்தும் முருகன்;
வந்துலவும் மூவுலக
விந்தையெல்லாம் முருகன்;
வண்ணமயி லேறிமகிழ
மீதமர்ந்த முருகன்.

# குறத்தியும் காதற் பெண்ணும்

[கலைவிநோதன்]

ஒரே இடத்திலிருந்து 'சோசியம்' சொல்லும் சாஸ்திரிகளைக் காட்டிலும், மலைமுதல் கடல்வரை அலைந்து திரிந்து கொண்டிருக்கும் குறத்திக்கு உலகமும் மனித சுபாவமும் அதிகமாகத் தெரியும். எனினும் அதிகமான சம்பாவனை இவளுக்குத் தேவையில்லை.

குடுக்கை நிறையப் பழங்கஞ்சியோ, கூழோ வார்த்தாலும் போதுமானது. அதை வயிறு நிறையக் குடித்து ஏப்பமிட்டுக்கொண்டே, சாஸ்திரங்களை நிறையக் கரைத்துக் குடித்து ஏப்பமிட்டுக் கொண்டிருக்கும் சாஸ்திரிமாரின் பேராசையில்லாமலே, அவர்களைக் காட்டிலும் அதிக அளவில் இரகசியங்களை விண்டு காட்டத் தொடங்கி விடுவாள். கூழுக்கு மேல் கிடைப்பதெல்லாம், மேல் வரும்படி!

## குறிகாரியின் வசீகரம்

இதயத்திற்குள்ளே எவ்வளவு ஆழத்தில் இரகசியங்களைப் புதைத்துவைத்திருந்த போதிலும், அவை குறி கேட்பவரின் முகத்தின் வழியாகவும், விழிகளின் வழியாகவும், வார்த்தைகளின் வழியாகவும், கைகளின் வழியாகவும் ஒழுகிவிடும், குறிகாரியின் வசீகர சக்தியால்! இந்த வசீகர சக்தி விசேஷமாகப் பெண்களை ஆகர்ஷிப்பது வழக்கம்.

தரை மெழுகிக் கோலம் போட்டுப் பிள்ளையார் பிடித்துத் தேங்காய் உடைத்து வைத்து, இஷ்ட தெய்வங்களையெல்லாம் ஒன்று விடாமல் தோத்திரம் செய்து கஷ்டப்படுத்திக்கொண்டு, "அம்மா தங்க ராசாத்தி! எங்கே? மோதிரம் போட்ட அந்த மோகனக் கையை இப்படிக் காட்டு!" என்று சொல்லிக் குறத்தி ஒரு பெண்மணியின் கையைப் பிடித்துப் பார்க்கிறாள். அந்தப் பெண்ணும் அந்த வசீகரத்திற்கு அப்படியே உட்படுகிறாள்.

## தோத்திரப் பிரியம்

அந்தக் கையைத் தருமதேவதையாகவே பாவித்து,

மாறாமல் இரு நிலத்தில்
அறம் வளர்க்கும் கையே!

[இருநிலம் = பெரிய உலகம்.]

என்று தோத்திரம் செய்யத் தொடங்குகிறாள்.

வசந்தவல்லியின் மனப்பான்மையை ஒருவாறு தெரிந்துகொண்ட குறத்தி, வேறு விதமாய்ப் புகழாமல் அவளுடைய தருமசிந்தையை முதல் முதல் பாராட்டுகிறாள்.

அந்தப் புகழ்ச்சி அவளுக்குத் திருப்தியாகத்தான் இருக்கிறதென்பதையும் அறிந்துகொண்டு,

மனையறத்தால் அறம்பெருக்கித்
திறம்வளர்க்கும் கையே!

என்று சொல்லிக் கையைச் சோதித்துப் பார்க்கிறாள். தருமத்தை இன்னும் அதிகமாக வளர்ப்பதற்காகவே இல்லறத்தை நாடுவாள் என்பது குறிப்பு.

## சோதனையும் பராக்கும்

'மனையற'த்தைக் குறிப்பிட்டதும் முகத்திலே பளிச்சென்று ஜொலித்த காதற்குறியை நன்றாகக் கண்டுகொள்ளுகிறாள். கண்டும் காணாதவள்போல்,

வீறாக நவநிதியும்
விளையும் இந்தக் கையே!
மேன்மேலும் பாலமுதம்
அளையும் இந்தக் கையே

[வீறாக = சிறப்பாக.]

என்று அந்தச் செல்வக் கையின் அருமை பெருமைகளை விவரிக்கிறாள்.

அவ்வளவு பாக்கியத்தையும், அவள் நல்ல வழியில் உபயோகிப்பவள் என்பதையும், அதனால் அவளுடைய கையை நோக்கிக் கும்பிடுவார்கள் மற்றப் பெண்களெல்லாம் என்பதையும், அதிக உசிதமாகவும் வெகு உத்ஸாகமாகவும்,

ஆறாத ஜனங்கள்பசி
ஆற்றும் இந்தக் கையே!
அணங்கனையார் வணங்கி நித்தம்
போற்றும் இந்தக் கையே!

என்று தெரிவிக்கிறாள்.

## காதற்குறி

இவ்விதமாய்ப் பராக்குக் காட்டியபின், அவளுடைய காதலைக் குறித்துப் பேசத் தொடங்கித் தன் அழகிற்குத் தகுந்த அரசிளங்குமரனை அடையப் போவதாகச் சொல்லி, அவளை ஆச்சரியம் அடையச் செய்கிறாள்.

ஆனால் அந்த அதிர்ஷ்டத்தைப் பளிச் சென்று சொல்லிவிடாமல்,

பேறாக நன்னகரம் காக்கும்
இந்தக் கையே!

[பேறு - பாக்கியம்.]

—அதாவது, "இந்த நகரம்செய்த பாக்கியத்தால் இந்தக் கையே செங்கோல் செலுத்தப் போகிறது!" என்று சாதுரியமாகப் பேசுகிறாள். அந்த அழகு - ராணி அந்த நகரத்து ராஜாவை மணந்து மகாராணியுமாவாள் என்பது குறிப்பு.

இப்படி அதிசயமாகச் செய்தி சொன்னதும், மறுபடியும் முகக் குறி பார்த்துக் கைக் குறியும் பார்த்து, "இந்தக் கை, திரிகூட ராஜருக்கே தகுதியானது!" என்று தைரியமாகச் சொல்லி விடுகிறாள், காதலரைத் தெளிவாகக் குறிப்பிட்டு.

பிறவாத நெறி யார்க்கே
ஏற்கும் இந்தக் கையே!

என்று சொல்லி நிறுத்தியதும், வசந்தவல்லியின் ஆச்சரியம் ஆனந்தமாகப் பொங்கியிருக்க வேண்டும் அல்லவா?

## பாடிப் பாடிப் பாருங்கள்

இவ்வளவு அழகாகக் கைத் திறம் சொல்லிக் குறி பார்க்கும் இந்தக் 'குறத்திப் பாட்'டை இப்போது ஒன்று சேர்த்துப் பாடிப் பார்ப்போம்:

மாறாமல் இரு நிலத்தில்
அறம்வளர்க்கும் கையே!
மனையறத்தால் அறம் பெருக்கித்
திறம்வளர்க்கும் கையே!
வீறாக நவநிதியும்
விளையும்இந்தக் கையே!
மேன்மேலும் பாலமுதம்
அளையும்இந்தக் கையே!
ஆறாத ஜனங்கள்பசி
ஆற்றும் இந்தக் கையே!
அணங்கனையார் வணங்கி நித்தம்
போற்றும்இந்தக் கையே!
பேறாக நன்னகரம்
காக்கும்இந்தக் கையே!
பிறவாத நெறியார்க்கே
ஏற்கும்இந்தக் கையே!

—குற்றாலக் குறவஞ்சி.

[இரு நிலம் - பெரிய நிலம். வீறு - பெருமை. பேறு - பாக்கியம். பிறவாத நெறியார் - திரிகூட ராஜா.]

இந்தப் பாட்டை எத்தனை தடவை பாடிப் பார்த்தாலும், ரஸிகர்களுக்குத் தெவிட்டிப் போவதில்லை. சாதாரணமான தமிழ்ச் சொற்களிலிருந்து, எப்படியோ ஒரு வித்தை செய்து, 'தெவிட்டாத செந்தேன்' எடுக்கிறார் கவிஞர்.

அந்த ஜால வித்தையின் பயனாகக் குறிகாரியின் குரலை மட்டுமா கேட்கிறோம்? குறி பார்க்கும் இரண்டு ஜாலக் கண்களையும், குறி கேட்கும் இரண்டு நீலக் கண்களையுமே பார்த்து விடுகிறோம்!

# பஞ்சத்தைப் பரப்புகின்றனர்

[ஏ. ஜி. வெங்கடாச்சாரி]

குயவனுக்குப் பலநாள் வேலை: தடிக்காரனுக்கு ஒருநாள் வேலை என்பார்கள். ஜனவரி மாதத்திலிருந்து சேலம், வடஆர்க்காடு, சித்தூர், கடப்பை ஜில்லாக்களில் கள்ளுக்கடைகளைத் திறந்துவிடுவதெனக் கவர்னர் செய்த முடிவு இதைப் போலத்தான் இருக்கிறது. மதுவிலக்கு முதன்மையான ஆசாரச் சீர்திருத்தம் என்பது ஒரு புறமிருக்கட்டும். இப்பொழுது அதை ரத்து செய்வதால் ஏற்படப்போகும் பொருளாதார அபாயங்களைப்பற்றியே என் அனுபவத்திலிருந்து சில கருத்துக்களை இங்கு வெளியிடுகிறேன். சர்க்காரின் இந்த முடிவினால், இந்த நான்கு ஜில்லாக்களிலும் லக்ஷக்கணக்கில் ஏழை ஜனங்கள் பட்டினிப் பட்டாளத்தில் சேரவேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிடும் என்று அஞ்சுகிறேன். இதை உணராமல், பொறுப்பற்ற வகையில் இந்த முடிவைச் செய்திருக்கிறார்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது.

சேலம் ஜில்லா சம்பந்தப்பட்டவரையில் மதுவிலக்குக்கு முன்னிருந்த நிலைமையையும், அது வந்தபிறகு ஏற்பட்ட புரட்சிகரமான மாறுதல்களையும் நான் அறிவேன். மற்ற இடங்களிலும் அப்படித்தான் என்று சர்க்கார் அவ்வப்பொழுது வெளியிட்ட தகவல்களிலிருந்தே தெரியவருகிறது. இந்த அனுபவத்திலிருந்து கூறுகிறேன், சர்க்காரின் அடாத செய்கை எங்கும் பயங்கரமான பட்டினியைப் பரப்பப் போகிறது என்று. வடஆர்க்காடு தவிர மற்ற மூன்றும் வறுமை மிகுந்துள்ள ஜில்லாக்கள். வடஆர்க்காட்டிலும் பெரும்பான்மை மக்கள் ஒருவேளை சோறு தின்பவர்கள்தான். எனவே, நான் சொல்பவை நாலு ஜில்லாக்களிலும் ஏழை மக்களாயுள்ள பெரும்பான்மையோருக்கு முற்றிலும் பொருந்தும்.

தானியங்கள் உயர்ந்த விலை விற்பதால் விவசாயியிடம் முன்னிருந்ததைவிட அதிகப் பணம் இருப்பதாகவும், பணப்பெருக்கத்தால் ஏற்படும் தீங்குகளைப் போக்கடிக்கும் முயற்சியில், இந்தப் பணத்தில் ஒரு பகுதியைக் கள் விற்பனை மூலம் சர்க்கார் திரும்பப் பெறுவது நியாயமென்றும் வாதிக்கப்படுகிறது. "நெல் காய்ச்சி மரம் எப்படி இருக்கும்?" என்று கேட்கும் பிரகஸ்பதிகள்தான் இம்மாதிரி வாதிப்பர். சென்னைச் சர்க்கார்கூட அப்படித்தானா என்றால், 'ஆமாம்' என்றுதான் பதிலளிப்பேன். இந்தச் சர்க்கார் பொது ஜனங்களிடையே வேரூன்றியிராத சர்க்கார். நாட்டு வளப்பமறியாத கிணற்றுத்தவளை, எல்லாம் தெரிந்ததுபோலப் பாவித்துக் கொள்கிறது. மிகப் பெரிய மிராசுதாரர்கள் தவிர, பெரும்பான்மை விவசாயிகளின் நிலைமை முன்னிருந்ததைவிட எல்லா வகைகளிலும் மோசமாய் விட்டிருப்பதை இது ஒப்புக்கொள்ளவில்லை.

பண்ணைத் தொழிலுக்கு வேண்டிய கால்நடைகள் முதல் கார், கலப்பை, கயிறு வரை விலைகள் நான்கு அல்லது ஐந்து மடங்கு உயர்ந்திருக்கின்றன. கிராமங்களில் வேலை செய்து பிழைப்போருக்கு, அகவிலை உயர்வின் காரணமாக, அதிகமான கூலி கொடுக்கவேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் குடியானவன் தான் உபயோகிக்கும் மற்றப் பண்டங்களுக்கும் அதிகமான விலை கொடுக்கவேண்டியிருக்கிறது. நடுத்தரக் குடியானவர்கள் பட்டினியில்லாமல் இருக்க முடிகிறது. சிறிய புலங்களை வைத்திருப்பவர்

களும், ஒன்றிரண்டு ஏர்களை வைத்துக் கொண்டு வாரம் அல்லது குத்தகை சாகுபடி செய்பவர்களும், கூலி வேலைக்காரர்களும், இரண்டு வேளையும் வயிறாரச் சாப்பிடுவதாகச் சொல்வதற்கில்லை. இந்த மூன்று இனத்தினரும் தங்கள் வருவாயில் பெரும்பகுதியை ஆகாரத்துக்காக மட்டுமே செலவழிக்கிறார்கள். அப்படியிருந்தும் போதிய போஷாக்கான உணவு அவர்களுக்குக் கிடைப்பதில்லை. எனினும், பரம ஏழைகளாயுள்ள இந்த வர்க்கத்தினர், மதுவிலக்கு வந்த ஜில்லாக்களில், மற்ற ஜில்லாக்களிலிருப்போரைவிடச் சற்றுச் சுகமாகவே வாழ முடிந்திருக்கிறது. இதற்குக் காரணம், கள்ளுக்காக விரயமாகும் பணம் குடும்பத்தின் போஷாக்குக்குப் பயன்படுவதற்கு வேண்டிய நிலைமை சிருஷ்டிக்கப்பட்டதுதான். மற்ற ஜில்லாக்களில் உள்ள ஏழைகளெல்லாம் கஷ்டப்படுகையில், இந்த நான்கு ஜில்லாக்களிலுள்ள ஏழைகளின் வாழ்க்கை மட்டும் ஒரு அளவுக்காவது வேறு தினுசாயிருப்பானேன் என்று நினைத்துத்தான் காருண்ய கவர்ன்மெண்டார் எல்லோரையும் ஒரே தரித்திர நிலைக்கு மட்டந் தட்டிவிடுவது நியாயம் என்று கருதினார்கள் போலத் தோன்றுகிறது. இல்லாவிட்டால் இந்த நான்கு ஜில்லாக்களிலுள்ள பரம ஏழைகளிடமிருந்து, வருஷம் நான்கு கோடி ரூபாய்வரை பறிமுதலாகும் ஒரு ஏற்பாட்டை, பஞ்சம் நாடெங்கும் பரவி வரும் இந்தக் காலத்தில் செய்வார்களா?

மது விலக்கு வருவதற்குமுன் பிரஸ்தாப ஜில்லாக்கள் நான்கிலிருந்தும் சர்க்காருக்குக் கிடைத்து வந்த கலால் வருமானம் 75 லக்ஷம். ஆனால் கள் குடிக்கும் ஏழைகள் கையிலிருந்து போகும் பணம் சுமார் 3 கோடியிருக்கும் என்று விஷயமறிந்தவர்கள் கூறுகிறார்கள். புது வருஷம் முதல் மரவரியை உயர்த்தப் போகிறார்கள். எனவே, கிட்டத்தட்ட 4 கோடி ரூபாய்வரை, போதிய போஷாக்கான உணவு உட்கொள்ளாமலிருந்துவரும் ஏழைகளிடமிருந்து, பறிக்கப்படுமெனத் தோன்றுகிறது. இவர்களில் பெரும்பான்மையினர் இப்பொழுது உணவுக்காகச் செலவழிக்கும் தொகையில் ஒரு பெரிய வீதாசாரத்தை (இது மொத்த வருமானத்தில் கால் பங்குக்குக் குறையாமலிருக்கும்) கள்ளுக்காகக் கொடுத்து விடுவார்கள். குடிகாரர்கள் மட்டுமன்றிக் குடிகாரர்களின் குடும்பங்களும், பழையபடி ஒருவேளை ஆகாரத்தையே உட்கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டுவிடும். இந்த ஜில்லாக்களின் பல பகுதிகளில் மலேரியா குடிகொண்டிருக்கிறது. உணவுக் குறைவினால், வியாதியைச் சமாளிப்பதற்கு வேண்டிய சக்தி குன்றிப் போம். கீழ்த் திசையில் இன்னும் பல வருஷங்கள் நீடிக்கப் போவதாகப் பயமுறுத்தும் யுத்த நிலைமையினால் வரவரக் கஷ்டங்கள் அதிகரிக்குமே ஒழியக் குறையமாட்டா. வறுமை வலுக்கும் என்று தெரிந்துங்கூட, ஏழைகளை இன்னும் ஓட்டாண்டிகளாக்கும் ஒரு ஏற்பாடு, பஞ்ச காலத்தில் அமலுக்குவரும்படி செய்வது சர்க்காரின் புத்திசாலித்தனத்தைக் காட்டுகிறதா அல்லது பொறுப்பற்ற தன்மையை வலியுறுத்துகிறதா?

சேலம் ஜில்லாவில் குடியிலிருந்து விமோசனம் பெற்ற பலர் (முன்னால் வெறும் கூலிவேலை செய்துவந்தவர்கள்) ராஜாஜி முதலில் கொடுத்த யோசனைகளைப் பின்பற்றி ஒன்றிரண்டு வருஷங்களில் தங்கள் சொற்பக் கடன்களை அடைத்துவிட்டு, ஒரு ஜதை ஏர் மாடு வாங்கிக் குத்தகை அல்லது வாரத்துக்குச் சாகுபடி செய்யும் குடியானவர்களாக மாறமுடிந்தது. இத்தகையோரின் எண்ணிக்கை ஒவ்வொரு கிராமத்திலும் பல நூறு இருக்கும். கள்ளரக்கன் பிடியில் மீண்டும் அவர்கள் விழுந்துவிட்டால் கடன் பெருகும்; மாடுகளை விற்றுவிடுவார்கள்; கள்ளுக்கு வேண்டிய பணத்துக்காகத் தங்கள் உழைப்பை மிகவும் மலிவாக விற்றுவிட அவர்கள் தயாராய் விடுவார்கள். இதன் விளைவாக அவர்களுடைய வாழ்க்கை நிலைமை

மோசமாகி, சக்கர வட்டமாக வந்து, குடிக்காத மற்ற ஏழைகளின் கூலி விகிதங்களையும் குறைத்துவிடும். ஏழைக் குடும்பங்களின் வருமானம், கிராமங்களில் ரொம்பவும் குறைந்துபோகும். விலைவாசிகள் பயங்கரமாய்க் கூடுதலாகி வருகையில் ஏழைகளின் வருமானம் வர வர மோசமாய்க் குறைந்துகொண்டே போகும் ஒரு நிலைமையை, ஜனங்களின் நலனைப் பிரதானமாக மதிக்கும் எந்தச் சர்க்காரும் செய்யத் துணியமாட்டார்கள். எல்லா ஜில்லாக்களிலும் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவந்து, ஏழை மக்கள் வயிறாரச் சாப்பிடுவதற்கு வழி செய்வதுதான் நியாய புத்தியுள்ள எந்தச் சர்க்காரும் இத்தருணத்தில் செய்திருக்க வேண்டிய வேலை. அதற்கு நேர்மாறாக இங்கு விவகாரங்கள் நடக்கின்றன.

இம்மாதிரிக் கிராமங்களிலுள்ள ஏழைகளை மேலும் மேலும் தரித்திரர்களாக்கும் ஏற்பாடுகளால் லாபமடையக் கூடியவர்கள் லேவாதேவிக்காரர்கள், பெரிய மிராசுதாரர்கள், ஊரை யடித்து உலையில் போடும் ஊழல் - கூட்டத்தார்கள், குறைந்த கூலி கொடுத்து அதிக வேலை வாங்குவதில் அக்கறையுள்ள சுரண்டல்-கோஷ்டியினரான கண்ட்ராக்டர்கள், பரம்பரையாய்க் கள் விற்பனையில் ஈடுபட்டிருந்து லக்ஷாதிகாரிகளாகிப் பிறகு காங்கிரஸ்மீது கடுஞ்சினங் கொண்ட அப்காரி கண்ட்ராக்டர்கள் ஆகியோர்தான். இந்தப் பரசிரமஜீவிகள்தான் இன்று பிரிட்டிஷ் ஆதிக்கத்தை இந்நாட்டில் தாங்கி நிற்கும் தூண்கள். இவர்களை ஜனங்கள் சென்ற தேர்தலில் திண்ணமாக நிராகரித்து விட்டனர். எதிர்காலத்திலும் ஜனங்கள் இவர்களைச் சட்டை செய்யப்போவதில்லை. எனினும் தங்குதடையற்ற பிரிட்டிஷ் ஸர்வாதிகார அமல் நடக்கையில் அவர்களுக்குக் குறைவென்ன? எல்லா அதிகார பீடங்களிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் நியமன அங்கத்தினர்களாக இந்த திருக்கூட்டத்தினர் இடம் பெற்றுவிட்டார்கள். இவர்களைத் திருப்தி செய்விப்பதற்காகத்தான் கவர்னர்கள் ளுக்கடைகளைத் திறந்து விடுகிறாரோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

கள்ளில் போஷாக்கு இருப்பதாகச் சர்க்கார் சொல்வது இறுமாப்புப் பேச்சு. குதிரை தள்ளிக் குழியும் பறிப்பது போல் இருக்கிறது இந்த வாதம். கள்ளிலுள்ள போஷாக்கு, பதனியில் இருக்கிறது. பதனியை இறக்கிச் சாப்பிட மதுவிலக்குச் சட்டம் இடந் தருகிறது. அதைச் சாப்பிட லைசென்சு வேண்டாம்; கண்ட்ராக்டர்கள் தேவையில்லை; லஞ்சமும் அவசியமில்லை. உண்மையில் 'போஷாக்கு வாதத்'தைச் சர்க்கார் நம்பினால், காலஞ் சென்ற ஜார்ஜ் ஜோஸப் கூறியதுபோல, புதுக் கள்ளை இலவசமாக எல்லோரும் இஷ்டப்படி சாப்பிடுவதற்கு வழி செய்யலாமே! அப்படிச் செய்யாமல், விதண்டா வாதம் பேசுகிறார்கள்.

ஜனங்கள் உற்சாகம் காண்பிக்கவில்லையென்றும், கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுவது அதிகமாய் விட்டதென்றும், சர்க்கார் சொல்வதும் பொருத்தமற்ற வாதம். ஜனங்களின் ஒத்துழைப்பை அவர்கள் நாடவேயில்லை. அதற்கு வசதிசெய்து தரவுமில்லை. கள்ளச் சரக்கு உற்பத்தி அதிகமானது சர்க்காரின் திறமையின்மையைக்காட்டுகிறதே ஒழிய மதுவிலக்கின் தோல்வியை நிரூபிக்கவில்லை. எனவே சர்க்காரின் நொண்டிச் சமாதானங்களை யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

சட்டப்படி மதுவிலக்கு ரத்தான போதிலும், ஜனங்களின் கட்டுப்பாடு மூலம் அது கிரியாம்சையில் அமலில் இருக்கும்படி செய்ய வேண்டியது நான்கு ஜில்லாக்களிலுமுள்ள தலைவர்களின் பொறுப்பு. இந்த முயற்சி முழுப் பயனை அளிக்காமலிருக்கலாம். ஆனால், பெரு முயற்சி செய்து பார்ப்பதால் லாபமே ஒழிய நஷ்டமில்லை. சர்க்காருடன் தகராறு சம்பவிக்கக்கூடும். அதற்காகத் தலைவர்கள் பின்வாங்கமாட்டார்கள்; பின்வாங்கக்கூடாது.

# கதைக் கோவை

## 3-ஆம் தொகுதி

(விரைவில் வருகிறது)

### எழுத்தாளருள் சிலர்

1. மகாமகோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார்
2. மகாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்
3. ராவ் சாகேப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார்
4. சுவாமி சுத்தானந்த பாரதியார்
5. ராவ் சாகேப் எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி., எல்.
6. "புதுமைப்பித்தன்"
7. பெ. நா. அப்புஸ்வாமி, பி. ஏ., பி. எல்.
8. டாக்டர் வே. ராகவன், எம். ஏ.
9. "கா. ஸ்ரீ. ஸ்ரீ."
10. ப. நீலகண்டன்
11. கோ. த. சண்முகசுந்தரம்
12. "கொனஷ்டை"
13. "ஸோமாஸ்"
14. பூவாளூர் சுந்தரராமன்
15. ஆ. ஸ்ரீநிவாஸராகவன், எம். ஏ.
16. "சசி"
17. "நாடோடி"
18. மஞ்சேரி ஈச்வரன்
19. "ப. ரா"
20. ஆ. சுப்பையா
21. "மாஜினி"
22. ஸயித் மகமத்
23. அகிலன்
24. ஸ்ரீமதி தஞ்சம்
25. ,, எம். எஸ். கமலா
26. ,, வேங்கடலக்ஷ்மி
27. ,, அம்மணி
28. ,, சரஸ்வதி
29. ,, ஆர். சுந்தரி
30. ,, ஜானம்மாள்

[மற்றும் 30-சிறுகதை எழுத்தாளர்களுடைய கதைகளும் கொண்டது. உங்கள் பிரதிக்கு உடனே முந்திக்கொள்ளுங்கள்.]

**எழுதுவோருக்கு எங்கள் புத்தக ஜாப்தா மறு தபாலில் அனுப்பப்படும்**

# இவ் ஆண்டு வெளிவந்த எங்கள் நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1. சிசு பாலனம் (ராஜாஜி) | 0 | 8 |
| 2. ஹேமாங்கினி (சரத்) | 0 | 10 |
| 3. சரத் சந்திரர் கதைகள் | 1 | 8 |
| 4. இந்தியக் கதைத் திரட்டு | 2 | 8 |
| 5. புயல் (டாகுர்) | 4 | 0 |
| ௸ (கலிகோ) | 5 | 0 |
| 6. லக்ஷ்மீ கடாக்ஷம் | 1 | 8 |
| 7. வஸந்தன் } எஸ். வி.வி. | 2 | 0 |
| 8. புது மாட்டுப்பெண் } எஸ். வி.வி. | 1 | 2 |
| 9. ஏசு கிறிஸ்து | 0 | 15 |
| 10. திரு. வி. க. - வாழ்க்கை வரலாறு | 2 | 0 |
| 11. உணவும் சுக வாழ்வும் | 1 | 4 |
| 12. சந்திரநாத் - (சரத்) | 2 | 4 |
| ௸ மலிவு பதிப்பு | 2 | 0 |
| 13. ஜடாதரன் - (கா.சி.வேங்கடரமணி) | 1 | 12 |
| 14. ஆண்டாள் | 1 | 0 |
| 15. இந்திரா } பங்கிம் சந்திரர் | 1 | 4 |
| 16. ரஜனி } பங்கிம் சந்திரர் | 1 | 4 |
| 17. மாதங்கினி } பங்கிம் சந்திரர் | 1 | 14 |
| 18. ஸ்ரீமத் பாகவத ஸாரம் | 1 | 6 |
| 19. ஆரியமத உபாக்யானம் முதல் பாகம் 24-ம் பதிப்பு | 0 | 10 |
| 20. தேசபக்தன் கந்தன் | 2 | 0 |

## அடுத்து வருபவை

1. புஷ்ப ஹாரம்
2. தேவி சௌதுராணி (பங்கிம்)
3. கதைக் கோவை - III
4. ராஜஸிம்ஹன் - பங்கிம்
5. சந்திரிகா (குகப்ரியை)
6. அழகி முதலிய கதைகள்
7. நீலமணி முதலிய கதைகள்
8. எரி நக்ஷத்திரம்
9. இரு துருவங்கள்
10. ஔவையார் - பி. ஸ்ரீ.
11. மீட்சி முதலிய கதைகள்

**அல்லயன்ஸ் கம்பெனி, 138-9, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், சென்னை**




'வேலியே பயிரை அழிக்கிறது' என்ற பழமொழியை நாம் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். இந்தப் பழமொழியின் உண்மையை நன்கறிய நாம் அரசியல் துறையில் இறங்கிப் பார்த்தால்தான், இதன் கருத்தும் கட்டமும் நமக்கு விளங்கும். பயிரைக் காப்பாற்றுவதற்காக வேலி போட்டிருக்கிறது. வேலியின் கடமை பயிரைக் காப்பாற்ற வேண்டியது. அப்படி ஒரு வேலி தன் கடமையைச் செலுத்தாமல் அதற்கே கால் முளைத்துப் பற்கள் கூரிட்டுப் பசியெடுத்து நாக்கைச் சப்புக் கொட்டிப் பயிரைத் தின்று அழிக்க ஆரம்பித்துவிட்டால், நாட்டில் உணவுப்பொருள்கள் எப்படி விளையும்? வாழ்வில் சுகமேது? சண்டையும் சச்சரவும் குடிகொண்டு பஞ்சப்பேய் வீட்டுக்குவீடு தாண்டவமாடும்.

அரசியலின் முதற் கடமை, நாட்டில் சமாதானத்தை நிறுவிப் பொருட்பெருக்கத்தை விருத்தி செய்யவேண்டியது. பயிருக்கு வேலி எப்படியோ, அப்படியே பொருட் பெருக்குக்கும் சுக வாழ்க்கைக்கும் தர்மத்தை ஒட்டிய அரசியலின் ஒழுக்கமான நடவடிக்கைகள் முக்கியமானவை.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முறைகளில் வேலி பயிரை அழித்துக் கொழுக்கும் கொள்கைகள்தான் மிகுந்து நிற்கின்றன. ஆகையால் இந்திய அரசியலில் பிரிட்டிஷ் நிர்வாகத்தில் சென்ற 150 வருஷ காலமாக வேலி பயிரை அழிக்கும் கதைகள் பல இருக்கின்றன.

இந்தக் கதைகளுக்குள், சமீபத்தில் மதுவிலக்குச் சட்டத்தை விலக்கிச் சென்னை அரசாங்கம் வெளியிட்டிருக்கும் அறிக்கையும், அதிலிருந்து வெளிவந்திருக்கும் கள்ளரக்கன் ஆட்சியும் ஒரு பெரிய கதை ஆகும். ஒரு பெரிய சோகரஸக் கதை. இதைவிட வேலியே பயிரை அழிக்கும் காட்சியுமுண்டோ?

* * *

19-11-43-ல் கோகலே ஹாலில் ராஜாஜி இரண்டு மணி நேரம் பிரசங்கம் செய்யும்போது நான் மெய்ம்மறந்து நின்றேன். துக்கம் என் அடிமைத் தொண்டையை அடைத்தது. ஹாலில் எள்ளுப்போட இடமில்லை. குண்டூசி நழுவினாலும் அதன் சத்தம் குண்டு போல் கேட்கும். ராஜாஜியின் குரலிலும் முகத்திலும் இருந்த சோகம், தன் குழந்தையை இழந்த தாய்க்குக்கூட அவ்வளவு இராது. நாம் நம்நாட்டிலே இவ்வளவு நிர்க்கதியாக இருக்கிறோமே!- என்று அவரது மனம் துயரமுற்றுப் புண்பட்டது. அவ்வளவு உணர்ச்சியையும் தன் வைராக்கிய மனத்தாலும், கறுப்பு மூக்குக் கண்ணாடியாலும் அடக்கிக்கொண்டு சாந்த முறையில் கோவை தவறாமல் சென்னை அரசாங்க அறிக்கையைப் பெரிய வக்கீல் சோதனை செய்வதுபோல் அக்கக்காக அலசியெடுத்து அபத்தத்தையும் அதர்மத்தையும் எடுத்துக் காட்டினார். காட்டி என்ன பயன்? தூங்குகிறவனை எழுப்பலாம்; விழித்துக் கொண்டிருப்பவனை எப்படி எழுப்புவது?

* * *

ஓநாயும் ஆட்டுக்குட்டியும் தண்ணீர் குடிக்க வந்த ஒரு பழங்கதையை நாம் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம்

ஆட்டுக்குட்டியைத் தின்னும் பொருட்டு ஓநாய் சொன்ன பல போலிக் காரணங்களை நீங்கள் பல தடவை கேட்டிருக்கிறீர்கள். சென்னை அரசாங்க அறிக்கையில் கண்ட காரணங்கள் இந்தப் பழங் கதையைத் தோற்கடித்து விட்டன. எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும், இந்த அடிமை நாட்டில் செலாவணியாய் விடுமென்ற தைரியந்தான் இந்த நியாயமில்லாத - சட்டமில்லாத - ரத்துச் சட்டத்துக்கு முக்கிய காரணம். இருந்தாலும், அறிக்கையில் கூறிய காரணங்களைக் கவனிப்போம்.

* * *

குழந்தைகள் ஊதும் காலணா ரப்பர்-பலூன்போல் உப்பி வரும் நாணயப் பெருக்கு, இந்த மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்தால் குறையுமென்று எப்படி அரசாங்கம் தீர்மானத்துக்கு வந்ததென்பது தெரியவில்லை. இந்த விஷயம் ராஜாஜி தெளிவாய்ப் பேசியிருக்கிறார். நெற்றி வேர்வை தரையில் சொட்டப் பாடுபட்டுச் சம்பாதித்த கால் ரூபா கள்ளுக்கடையில் போய் விழுவதால் ஏழைகளுக்கு வயிற்றுச் சுருக்கம் ஏற்படுமே யொழிய, நாட்டுக்கு நாணயச் சுருக்கம் ஏற்படாது. பட்டினியும் பசியும் ஏழைக் குடும்பத்தை அண்டும். கள்ளரக்கனைக் கண்டதும் பஞ்சப் பேய் தான் கூத்தாடும். ஏழைகளுக்குத்தான் மிக்க கஷ்டம். அதுவும், மதுவிலக்கிற்கு உட்பட்டிருந்த ஜில்லாக்கள்தான் பரம ஏழை ஜில்லாக்கள். எழுபது லட்சம் மக்களுக்குக் கைக்கு வந்த சோற்றில் படிக்குப் பாதி வாய்க்கு எட்டாமல் போய்விட்டது. ஏழைக் கூலியைக் கள்ளரக்கன் கையில் கொடுத்துத் தங்கள் அடுப்பையே அணைத்துக் கொள்ளும் படியாக நேரும். யுத்த நெருக்கடியிலா சென்னைச் சர்க்காருக்கு இந்த விபரீத புத்தி ஏற்பட வேண்டும்!

கள் சாப்பிட்டால் கொஞ்சம் நலம் உண்டு; அதில் உணவுச் சத்துக்கள் இருக்கின்றன-என்று அறிக்கை கருணையுடன் கூறுகிறது. குலை குலையாய்த் தேங்காய்களைக் காய்க்கும் கற்பக விருட்சத்தின் அருமைப் புதல்விகளான பாளைகளைத் தினந்தோறும் சித்திரவதை செய்து அவற்றின் உயிரைக் கள்ளாய் முறித்து அதிலிருந்தா உணவுப் பொருள் தேட வேண்டும்?

ராஜாஜி தெளிவாய் இரக்கத்துடன் கூறியதுபோல், "½ அணாத் தேங்காயில் உள்ள உணவுச் சத்து ½ ரூபாய்க் கள்ளில் இல்லை." தென்னங் கள்ளே இல்லை என்றால், நமது நாட்டில் எவ்வளவு தேங்காய் லட்சுமிகடாக்ஷ சின்னம் போல் உருண்டுகொண்டு, நமக்கு அதிக ருசியான உணவைப் பெருக்கும்!

உண்மையில், கள்ளில் உணவுச் சத்தே கிடையாது. பதனியில் கொஞ்சம் உண்டு. பூம்பாளையிலோ, ஈச்ச மரத்தின் நெஞ்சிலோ துளை போட்டு, அவைகளைத் தினசரி சித்திரவதை செய்து, பதனியோ கள்ளோ இறக்கி நமது மாமிச பிண்ட உடலை ஊட்டுவது தர்மமாகாது. இது ஸத்தான ஆகாரமாகாது. ஸத்தான ஆகார மன்றி, சாந்த நினைவுகளைப் பூலோகத்தில் நிலவச்செய்ய முடியாது. அரசாங்கங்கள் கள்ளைப் பொன்போல் கருதிச் சட்டமிட்டு விளம்பரப்படுத்தி வியாபாரம் செய்து பணம் சேமிப்பதே ஒரு பெரிய அதர்மமாகும். வேலியே பயிரை அழிக்கலாமா? தர்மமே வேரோடு அழிந்துபோகுமே!

அறிக்கையில் கண்ட மற்றொரு காரணம்: திருட்டுச் சாராயக் குற்றங்கள் அதிகமாகின்றன; அடக்க முடியவில்லை-என்பது. இது ஒரு விநோதமான காரணம். சென்னைச் சர்க்கார், முற்றிலும் ஓநாயும் ஆட்டுக் குட்டியும் என்ற கதையின் சாரத்தை ராஜதந்திரத்தில் புகட்டி வெற்றி அடைந்தார்கள் போலத் தோன்றுகிறது. வருஷத்தில் 6,000 சாராயக் குற்றங்கள் கண்டு பிடித்திருக்கிறோம்; ஆகையால் கள் இறக்கி விற்கச் சர்க்காருக்கு மறுபடியும் சட்டம் வேணும். ஆனால் சாராயத்தை இப்பொழுது காய்ச்சி விற்க முடியாது. ஏனென்றால் வெல்லம் சண்டைக்கு வேண்டியிருக்கிறது. ஆகையால் கள்ளை

யாவது கையாளுவோம்! சாராயம் சாப்பிடுகிறவர்கள், ஒருநாளும் கள் சாப்பிட மாட்டார்கள். என்ன ஓநாய் ஆட்டுக் குட்டி வாதம் இது!

குற்றத்தை அடக்க முடியவில்லை: ஆகையால் சட்டத்தையே ரத்துச் செய்து விடுவோம்! இந்திய அரசாங்கம் வெய்யிலில் காய்ந்து உலர்ந்த உயிரில்லாத வஸ்து என்று சொல்வது ஒரு பெரிய உண்மையென்றே தோன்றுகிறது.

* * *

ராஜாஜி தம் சொற்பொழிவில் தெளிவாய் எடுத்துக் காட்டியதுபோல், மதுவிலக்குச் சட்டத்தை விலக்க, இந்நாட்டின் தர்மத்தை ஒட்டி ஒருவருக்கும் அனுமதி கிடையாது. கள்ளும் சாராயமும், ஹிந்துக்களுக்கும் இஸ்லாமியருக்கும் ஒரு பெரிய அதர்மம். ஏழைக்கு இது இரத்தத்தை உறிஞ்சும் ஓர் அரக்கன்.

* * *

யுத்த நெருக்கடியில் வெற்றி பெறுவதற்காக கவர்னருக்குக் கொடுத்திருக்கும் சர்வாதிகார அவசரச் சட்டம் செய்யும் அதிகாரத்தைச் செலுத்தி மதுவிலக்குச் சட்டத்தை விலக்கிக் கள் அரக்கனை வெளிவிட கொஞ்சம்கூட நியாயம் கிடையாது. ஊன்றிப் பார்த்தால், இது யுத்த முயற்சிக்கு முரண்பாடாக முடியும். ஜனநாயக அரசாட்சியில், எல்லோரும் கரகோஷமிட்டுச் சட்டசபையில் வரவேற்று ஆறு வருஷம் அமுலுக்கு வந்த ஒரு சீர்திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய கவர்னருக்கு ஒரு 'ஸ்பெஷல் பவர்' கிடையாது என்பது நிச்சயம்.

இப்படிச் சட்ட சபைக்கே இஷ்டம் போல் செய்ய இடமில்லை என்றுதான் எண்ணவேண்டும். இது ஒரு தொன்று தொட்ட அடிப்படையான ஜனநாயகக் கொள்கையையும் கட்டுப்பாட்டையும் வேரோடு அழிக்கிறது. ஒரு சட்டசபை ஒரு சீர்திருத்தச் சட்டத்தை மாற்ற வேண்டுமானால், பொதுத் தேர்தலில் அதை ஒரு முக்கியமான 'இஷ்யூ' ஆக வைத்து அதில் வெற்றியடைய வேண்டும்: அப்போதுதான் அந்தச்சட்டத்தை மாற்றலாம். சட்ட சபைக்கே இல்லாத அதிகாரம் கவர்னருக்கு யுத்தநெருக்கடியில் எப்படிக் கிடைக்கும்? இவற்றையெல்லாம் ராஜாஜி தெளிவாய் எடுத்து உரைத்திருக்கிறார்.

* * *

பக்கம் பக்கமாய் இந்த மாதம் 'போகிற போக்கில்' இதைப்பற்றி எழுதுவேன். சோகம்தான் 'மௌனி'யைப் பிடிக்கிறது. கை சோருகிறது. பாரதமாதா, யுத்த வீரர்களையும் அரசியல்-மேதாவிகளையும் 'நோபெல்' பரிசுக் கவிகளையும் மகாத்மாக்களையும் விஞ்ஞான ரிஷிகளையும் பெற்று என்ன பயன்? நம் கையுழைப்பு நமக்குக் கிட்டவில்லையே: பராதீனத்தில் அல்லவோ கட்டுப்பட்டு நிற்கிறது!

மணி





# மைசூர் மர சாமான்கள்

பார்வைக்கு அழகையும் ஒற்றுமையையும், உடம்பிற்கு முழுசௌக்கியத்தையும், பழக்க வழக்கத்தில் உபயோகத்தையும் ஒட்டி, இவைகளை பொருக்கியெடுத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த மர சாமான்களின் உயர்தரத்தையும், அழகையும் ஒட்டிப்பார்த்தால், இவைகளின் விலை மிகக் குறைவு.

புது முறைகளில் உயர்தர மர சாமான்கள்
ரோஸ் உட், வெள்ளை ஸிடார் *etc.*

*எங்கள் காட்சி சாலைகளில் எப்பொழுதும் மெத்தை போட்ட பார்வையான சாமன்கள் கிடைக்கும்.*

முழு விவரங்களுக்கும், விலைக்கும் பின்வரும் விலாசத்திறகு எழுதவும்:

---

ஸூபரின்டேண்டன்ட்,

சாமராஜேந்தர டெக்னிகல் இன்ஸ்டியூட்,

**மைசூர்.**




மற்றொரு இந்திய ஞாபகார்த்த சின்ன

மைசூர் சந்தன சோப்

குணத்திலும், மணத்திலும், மேம்பாட்டிலும் சிறந்தது

எங்கும் கிடைக்கும்:

கவர்ன்மென்ட் சோப் பாக்டரி, பெங்களூர்

Edited & Published by K. S. Venkataramani at No. 34, Alamelu Mangapuram, Mylapore, Madras. Printed by T. V. Volaganatha Mudaliar Sadhu Press, 12, Ganapathy Mudali Street, Royapettah, M.